# எரிபொருள் நெருக்கடியால் மின் விநியோகம் பாதிக்கப்படும் நிலை

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 3000 மெற்றிக் தொன் டீசலை வழங்குவதாக உறுதியளித்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அவ்வாறான டீசல் வழங்கினால் மின்சாரத் தடைகளை ஓரளவு குறைக்க முடியும் என இலங்கை மின்சார சபையின் மேலதிக பொது முகாமையாளரும் ஊடகப் பேச்சாளருமான அன்ட்ரூ நவமணி தெரிவித்துள்ளார். எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மின் உற்பத்தி நிலையங்களில் பல மின் பிறப்பாக்கிகள் செயலிழந்துள்ளதால், நேற்றுமுன்தினம் (13) பிற்பகல் முதல் நாட்டின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப் பட்டுள்ளது. தேசிய மின் கட்டமைப்பில் 300 மெகாவோட் பற்றாக்குறை காரணமாக நாட்டின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டது.

02 பக்கம்

Follow us:

# தமிழன்

THAMILAN தமිළන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 429 பிலவ வருடம், தை மாதம் 02ஆம் திகதி சனிக்கிழமை (15.01.2022) ஹிஜ்ரி - 1443, ஜமா அத்துல் ஆகீர் - 11, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30

# எதிர்காலத்தில் 24 மணிநேர மின்வெட்டு அபாயம்!


## ஊழியர் சங்கம் எச்சரிக்கை

எதிர்வரும் காலங்களில் நாட்டில் 24 மணிநேர மின்வெட்டு அமுல்படுத்தப்படலாம் என இலங்கை மின்சார சபை ஊழியர் சங்கம் எச்சரித்துள்ளது.

இலங்கை மின்சார சபை ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜெயலால், எதிர்காலத்தில் மின் தட்டுப்பாடு காரணமாக நாடு மூடப்பட நேரிடும் என்று கூறினார்.

மின்சாரத் துறையில் நிலவும் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வுகளை வழங்கத் தவறியதன் விளைவாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக ஜெயலால் குறிப்பிட்டார். நாடு ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை கடும் வரட்சியை எதிர்கொள்வதை இலங்கை மின்சார சபை அறிந்துள்ளதாகத் தெரிவித்த அவர், வரட்சிக்கு முகங்கொடுக்க இலங்கை மின்சார சபை தயாராக இல்லை எனவும் தெரிவித்தார்.

02 பக்கம்




# 2022 இலங்கைக்கு மிகவும் சவாலான வருடம் - ஐ.நா தெரிவிப்பு!

கொரோனா வைரஸ் காரணமாக இலங்கை பல சவால்களை இந்த வருடம் எதிர்கொள்ளும் என ஐ.நா தெரிவித்துள்ளது.

இலங்கை உணவுப்பற்றாக்குறை அந்நியசெலாவணி நெருக்கடி கடன் ஆபத்துக்கள் போன்றவற்றை எதிர் கொள்ளும் என ஐ.நாவின் அறிக்கை தெரிவித்துள்ளது.

2022 உலக பொருளாதார நிலை மற்றும் வாய்ப்புகள் குறித்த அறிக்கையிலேயே இலங்கை குறித்து இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கியநாடுகளின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்களுக்கான திணைக்களத்தின் இந்த அறிக்கையில் ஒன்றுடன் ஒன்று கலந்த பல பிரச்சினைகள் உலகின் பொருளாதார வளர்ச்சி வேகத்தைக் குறைக்கின்றன என தெரிவித்துள்ளது.

2022 இல் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2.6 ஆக காணப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள ஐ.நா அறிக்கை இலங்கையின் முக்கிய சவால்களாக உணவுத் தட்டுப்பாடு வெளிநாட்டு நாணயக் கையிருப்பு குறைதல் மற்றும் கடன் ஆகியன காணப்படும் எனத் தெரிவித்துள்ளது.

இலங்கை, பாகிஸ்தானின் மத்திய வங்கிகள் அதிகரித்து வரும் பணவீக்கம், விரிவடையும் நடப்பு கணக்கு பற்றாக்குறைகளுக்கு மத்தியில் வட்டிவீதத்தை அதிகரித்துள்ள என சுட்டிக்காட்டியுள்ள ஐ.நா மத்திய வங்கிகள் அனைத்தையும் உள்ளடக்கிய மீள் எழுச்சி மற்றும் விலை ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்காக கொள்கை மாற்றங்களின் தருணங்கள் மற்றும் அளவுகள் குறித்து மதிப்பீடு செய்யவேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

தென்னாசிய பாரிய பின்னடைவு ஆபத்தினை எதிர்கொள்கின்றது எனவும் ஐ.நா தெரிவித்துள்ளது.



தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு நேற்று (14) எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் தைப்பொங்கல் நிகழ்வு இடம்பெற்றது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இந்நிகழ்வுக்கு தலைமை தாங்கினார்.

# கோட்டாபய ஆட்சி கவிழ்ந்துவிட்டது!

## ஆட்சியாளர்கள் இருப்பதாகத் தெரியவில்லை; யாழ்ப்பாணத்தில் சுமந்திரன் காரசாரம்

**நெல்லியடி நிருபர்**

நாட்டை இருண்ட யுகத்துக்குள்ளே கொண்டுசெல்லும் இந்த அரசை அகற்றவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளருமான எம்.ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தனது வடமராட்சி தொகுதி அலுவலகத்தில் நேற்று (14) இடம்பெற்ற தைப்பொங்கல் விழாவில் கலந்துகொண்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

02 பக்கம்



# விவசாயிகளின் சாபம் இந்த அரசாங்கத்தை சும்மா விடாது

## வெள்ளவத்தை பொங்கல் விழாவில் மனோகணேசன்



02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..



சதொச சலுகை விலை நல்லம்தான்.. போனா அங்க சாமான்கள் இருக்குமோ...?

# லங்கா சதொச மூலமாக சலுகை விலை விற்பனை

## நேற்று முதல் அமுல்

2022ஆம் ஆண்டுக்கான லங்கா சதொச ஊடாக சலுகை விலையில் பொருட்களைப் பொதிசெய்து வழங்கும் நடவடிக்கை நேற்று (14) முதல் அமுலுக்கு வந்துள்ளது.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன ,கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் இந்தப் பொதியை ஊடகங்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

அதன்படி 10 கிலோ சுப்பர் சம்பா, ஒரு கிலோ வெள்ளை சீனி, 1 கிலோ சிவப்பு பருப்பு, ஒரு கிலோ இடியப்ப மாவு, 500 கிராம் நெத்தலி, 400 கிராம் நூடில்ஸ், 400 கிராம் உப்பு, 2 தேங்காய்ப்பால் பக்கெட் (330 மி.லீ.பக்கெட்), 100 கிராம் மிளகாய் தூள், 100 கிராம் மஞ்சள் தூள், 100 கிராம்...

02 பக்கம்



'தமிழன்' பத்திரிகை அலுவலகத்தின் பொங்கல் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. (படப்பிடிப்பு - சமன் அபேசிறிவர்தன)

# தேவாலயத்தில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவத்தின் பின்னால் முக்கிய சூத்திரதாரி

## அமைச்சர் சரத்வீரசேகர அதிர்ச்சித் தகவல்

02 பக்கம்

# ஜனாதிபதி செயலர் பதவிக்கு நேற்று விடைகொடுத்தார் பி.பீ



ஜனாதிபதியின் செயலாளர் பதவிக்கு கலாநிதி பி.பீ.ஜயசுந்தர நேற்று விடைகொடுத் தார். ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற எளிமையான நிகழ்வில் பதவி விலகுவதாக அவர் அறிவித்துள்ளார்.

இதன்போது அவர் தனது அலுவலக அதிகாரிகளிடம் இருந்து விடைபெற்றுக் கொண்டார். பி.பீ.ஜயசுந்தர பல வருடங்களாக அரசாங்கத்தின் உயர் பதவிகளை வகித்துள் ளார்.

02 பக்கம்

## பொரளை தேவாலயத்தில் கைக்குண்டு;

# சந்தேகநபரை கைதுசெய்ய 2 பொலிஸ் குழுக்கள் நியமனம்

02 பக்கம்

INVITATION
UCP
එක්සත් කොංග්‍රස් පක්ෂය
ஐக்கிய காங்கிரஸ் கட்சி
UNITED CONGRESS PARTY

எதிர்வரும் 2022 ஜனவரி 15ஆம் திகதி எமது ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் 17வது தேசிய மாநாடு கல்முனையில் நடைபெறவுள்ளது.

காலம்

15.01.2022 சனி காலை 9.00 மணி- பிற்பகல் 2.00 மணி

இடம்

ஆஸாத் பிளாஸா மண்டபம் - கல்முனை

நன்றி

முபாறக் அப்துல் மஜீத்
தலைவர்
ஐக்கிய காங்கிரஸ் கட்சி
தொடர்புகளுக்கு: 077 5449017

Dear Sir / Madam,
The 17th General Assebly of our
United Congress Party (Muslim Ulama Party)
Will be held on January 15, 2022 in Kalmunai
at Azad Plaza Hall, Kalmunai

I Warmly invite you to join us in this assembly.



தமிழன் பத்திரிகை அலுவலகத்தின் பொங்கல் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. (படப்பிடிப்பு :- சமன் அபேசிறிவர்தன)

## கொழும்பு தேவாலய கைக்குண்டு மீட்பு;

# சோடித்த கதைகளையே பொலிஸார் கூறுகிறார்கள்!

## பேராயர் பரபரப்பு குற்றச்சாட்டு

பொரளையிலுள்ள தேவாலயத்தில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் பொய்யான கதையை புனைந்துள்ளதாக பேராயர் மல்கம் ரஞ்சித் பகிரங்கமாக குற்றம்சாட்டினார்.

இந்த சம்பவம் தொடர்பான சி.சி.ரி.வி காட்சிகளை ஊடகங்களுக்கு வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

02 பக்கம்



# சுதந்திரக் கட்சி வெளியேறினால் அரசாங்கம் கவிழ்வது நிச்சயம்

## நாமலுக்கு மைத்ரி பதிலடி

02 பக்கம்

# அரசாங்கத்தை எதிர்த்து செயற்படுவதாலேயே தமிழர் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றம் தொடர்கின்றது

## ஐக்கிய காங்கிரஸ் கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத்

(பாறுக் ஷிஹான்)

அரசாங்கத்துடன் இணைந்து செயற்படாவிடின் எமக்கு எந்தத் தீர்வும் கிடைக்காது. அரசாங்கத்தை எதிர்த்து நாம் செயற்படுகின்ற எதிர்வினையினால் தான் சிங்களக் குடியேற்றம் தொடர்கின்றது. எனவேதான் இவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டுமாயின் சிங்கள மக்களிடமும் அரசாங்கத்திடமும் எமது பிரச்சினைகளை எடுத்துக் கூற வேண்டும். அவ்வாறில்லாது ஐக்கிய நாடுகள் சபையினை இந்தியா நாடுவதனால் எதனையும் தீர்க்க முடியாதென சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் - என ஐக்கிய காங்கிரஸ் கட்சித் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம், கல்முனை பகுதியில் ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் 17ஆவது தேசிய மாநாடு தொடர்பாகவும் சமகால அரசியல் தொடர்பில் விசேட ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று (14) கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றபோது அதில் கலந்துகொண்டு அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது,

இந்த நாட்டிலுள்ள முஸ்லிம் கட்சிகள் உண்மைக்கு மாறாக செயற்பட்டு மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கின்ற காரணத்தினால் 2005ஆம் ஆண்டு எமது கட்சியை ஆரம்பித்தோம். இவ்வாறு ஆரம்பித்த பின்னர் மிக நேர்மையாக எமது மக்களுக்கு அரசியலை சொல்லிக்கொடுத்து அரசியல் விழிப்பூட்டல்களை மேற்கொண்ட கட்சியாக இருந்துகொண்டு இருக்கின்றோம். நாங்கள் யாரையும் ஏமாற்றவுமில்லை. எவரையும் ஏமாற்ற அனுமதிப்பதுமில்லை. அந்தவகையில் சில கட்சிகள் மக்களை ஏமாற்றுகின்ற காலகட்டத்தில் இளைஞர்கள் ஒத்துழைப்பார்களாயின் எதிர்கால நேர்மையான அரசியலை மேற்கொள்ள முடியும்.

மேலும் மாகாண சபை முறைமை இந்தியாவின் தன்னலத்திற்காக கொண்டுவரப்பட்டதேயன்றி




முஸ்லிம் மக்களின் எதுவித கருத்துகளும் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. 13ஆவது அரசியல் சீர்திருத்தமானது இந்நாட்டில் கடந்த காலங்களில் நிலவிய இனப்பிரச்சினைக்காக இந்தியாவினால் திணிக்கப்பட்ட ஒன்றாகும். அந்த வகையில் தமிழ்க் கட்சிகள் சில இந்தியப் பிரதமருக்கு கடிதம் அனுப்புவதாகக் கூறி மக்களை ஏமாற்ற முயற்சிக்கின்றார்கள். இந்தக் கடிதம் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அக்கறையுடன் செயற்படுவதை காண்கின்றோம். இதற்கு எதிராக எமது கட்சி கண்டனங்களை தெரிவித்திருந்தது. முஸ்லிம்கள் தனியான இனம் என்பதை அடையாளப்படுத்தும்வரை வடக்கு, கிழக்கு மாகாணம் இணைவதை அனுமதிக்க முடியாது. மேற்படி கடிதமானது இந்தியாவிற்கு அனுப்பப்படுமா அல்லது அவர்களுக்கு கிடைக்குமா என்பது வேறு பிரச்சினை. இக்கடித செயற்பாட்டினை முன்னெடுப்பவர்கள் தமிழ் பேசும் மக்களை ஏமாற்றுவதற்கும் தங்களது வாக்கு வங்கிகள் சரியாமல் பாதுகாப்பதற்குமே இவ்வாறு செயற்படுகின்றார்கள். இந்தக் கடித விடயத்தில் தற்போது தமிழ்க் கட்சிகளிடையே ஆலோசனைகளை பின்பற்றாமையினால் பிளவுகள் ஏற்பட்டுள்ளன. ஒன்றாக இருந்து கடிதம் எழுதிவிட்டு தற்போது ஆளுக்கால் விமர்சனங்களை முன்வைக்கின்றனர். இந்தியாவினால் எமது நாட்டு பிரச்சினையினை தீர்ப்பதற்குரிய சாத்தியங்கள் இருப்பதாக எமக்கு தெரியவில்லை.

எமது நாட்டின் இனப்பிரச்சினைக்கு நமது நாட்டில்தான் தீர்வுகாண வேண்டும். முதலில் வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற இரு இனங்களும் ஒற்றுமைப்பட வேண்டும். இந்தியாவிற்கு கடிதம் அனுப்புவதோ அல்லது ஐக்கிய நாடுகளுக்கோ கடிதம் அனுப்புவதற்கு முன்னர் நாம் ஒற்றுமையாக இருக்கவேண்டும். கல்முனையில் தமிழ் முஸ்லிம் மக்கள் ஒன்றாக வாழமுடியாது. வேறு வேறு பிரதேச செயலகத்திற்கு கோரிக்கை விடுத்து வருகின்ற நிலையில் வடக்கு - கிழக்கை இணையுங்கள் எனக் கூறுவது கீழ்த்தரமான அரசியல் செயற்பாடாகும். ஆகவே, வடக்கு கிழக்கிலுள்ள இவ்விரு இனங்களும் பேசவேண்டும். பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றை தீர்ப்பதற்கு முன்வரவேண்டும். அரசாங்கத்துடன் இணைந்து செயற்படாவிடின் எமக்கு எந்தத் தீர்வும் கிடைக்காது. அரசாங்கத்தின் அனுசரணை எமக்கு வேண்டும். சிங்களக் குடியேற்றங்கள் உருவாவதும் இவ்வாறுதான். அரசாங்கத்தை எதிர்த்து நாம் செயற்படுகின்ற எதிர்வினையினால்தான் இவ்வாறான குடியேற்றம் தொடர்கின்றது. அரசாங்கமும் மக்கள் பலத்தைக் கூட்டி அவர்களின் பலத்தைக் காட்ட முயல்கின்றனர். எனவேதான் இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டுமாயின் சிங்கள மக்களிடமும் அரசாங்கத்திடமும் பிரச்சினைகளை எடுத்துக் கூற வேண்டும். அவ்வாறில்லாது ஐக்கிய நாடுகள் சபையினை இந்தியா நாடுவதனால் எதனையும் தீர்க்க முடியாது என சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் எனக் கூறினார்.

# கல்குடா - கும்புறுமூலை கடலில் நீராடச்சென்ற இரு சிறுவர்கள் மாயம்

## தேடும் பணிகள் தீவிரம்





(மீராவோடை நிருபர்)

மட்டக்களப்பு - கல்குடா, கும்புறுமூலை கஜுவத்தை கடலில் நேற்று (14) நீராடிய ஏழு சிறுவர்களில் இருவர் கடலில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு - கிரான் பகுதியைச் சேர்ந்த ஏழு சிறுவர்கள் குறித்த கடலில் நீராடிக்கொண்டிருந்த போதே இருவர் கடலில் மூழ்கியுள்ளனர்.

இதில், கிரான் பிரதான வீதியைச் சேர்ந்த ஜீவானந்தா சுஜினன் (வயது 16), ச.அஸ்வன் (வயது 16) ஆகிய இரு சிறுவர்களும் கடலில் மூழ்கி காணாமல்போயுள்ளனர்.

கடலில் நீராடிய மற்றுமொரு சிறுவன் காப்பாற்றப்பட்டு வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடலில் காணாமல்போன சிறுவர்களைத் தேடும் பணிகள் இடம்பெற்று வருவதுடன், இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உழவு இயந்திரத்தில் உழுதுகொண்டிருந்த குடும்பஸ்தர் சில்லில் சிக்கி உயிரிழப்பு



(யாழ் நிருபர்)

யாழ்ப்பாணம் - புத்தூர் பகுதியில் இரு சக்கர உழவு இயந்திரத்தில் உழுதுகொண்டிருந்த குடும்பஸ்தர் உழவு இயந்திரம் புரண்டதில் சில்லுக்குள் நசியுண்டு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று (14) மதியம் தோட்ட நிலத்தை உழும்போது இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் புத்தூர் - கலைமதி பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான சின்னதம்பி தெய்வேந்திரன் என அச்சுவேலி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள அதே வேளை, மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அமரபுர மஹாநாயக்க தேரருக்கு சான்றுப்பத்திரம் கையளிப்பு

இலங்கை அமரபுர மஹா நிக்காயவின் சங்கைக்குரிய மஹா நாயக்கர் பதவிபெற்றுள்ள தொடம்பஹல சந்தசிறி தேரருக்கு சான்றுப்பத்திரம் வழங்கும் அரச நிகழ்வு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில், கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நேற்று (14) பிற்பகல் நடைபெற்றது.

ஜனாதிபதியினால் மஹா நாயக்கத் தேரருக்கு இந்தச் சான்றுப்பத்திரம் வழங்கப்பட்டதுடன், பிரதமர் விஜினி பத்திரத்தை வழங்கினார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, நாடாளுமன்ற உறுப்பினர் ருவன் விஜேவர்தன, இலங்கைக்கான மியன்மார் தூதுவர் யூ ஹன் து (U Han Thu), அமரபுர நிக்காயாபிவுர்த்தி நிர்வாக சபையின் தலைவர் அஜித். டீ சொய்சா, பிரதித் தலைவர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன ஆகியோர், தேரருக்கான பிரிக்கர வழங்கினர்.

இதன்போது இலங்கை அமரபுர மஹா நிக்காயாவின் உத்தியோகபூர்வ இணையதளத்தை ஜனாதிபதி ஆரம்பித்து வைத்ததுடன், நிக்காயவின் மறுசீரமைக்கப்பட்ட விஹாரைக் கோப்பகம், அச்சபையின் செயலாளர் ஆர்.ஏ.டி. சிறிசேனவால் தேரருக்கு வழங்கப்பட்டது.

மஹா நாயக்கர்கள், அனுநாயக்கத் தேரர்கள் உள்ளிட்ட மஹா சங்கத்தினர், அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள், ஆளுநர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள், தூதுவர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் நிக்காயவின் நிர்வாக சபை உறுப்பினர்கள் எனப் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## எதிர்காலத்தில்...

மற்ற ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டு மழைப்பொழிவு குறைவாக இருக்கும் என்றும், நீர் மின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் படிப்படியாக குறைந்து வருவதாகவும் அவர் கூறினார்.

நாட்டில் அதிக மழை பெய்து இரண்டு வாரங்களுக்கும் குறைவான காலமே கடந்துள்ள போதிலும், தற்போது நீர்த்தேக்கங்களில் சேறு சேகரிக்கப்பட்டதே தவிர, நீர் சேகரிக்கப்படவில்லை எனவும் ஜயலால் குறிப்பிட்டார்.

மின்வெட்டு ஏற்பட்டால் மின்சாரத்தை மீட்டெடுப்பதற்கு மின்சார சபைக்கு மின் நிலையங்கள் இல்லை. இது ஒரு நெருக்கடியான சூழ்நிலை என்று அவர் கூறினார்.

தற்போது அமுல்படுத்தப்படும் மின்வெட்டு தொடர்பில் அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் முன்னுக்குப்பின் முரணான கருத்துகளை வெளியிட்டு வருவதாக ரஞ்சன் ஜயலால் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி செயலர் ...

இதேவேளை, ஜனாதிபதியின் புதிய செயலாளராக காமினி செனரத் நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.19ஆம் திகதி அவர் கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார்.

## லங்கா சதொச...

தேயிலை, 80 கிராம் பொடி லோஷன், 100 கிராம் சதொச சந்தன சவர்க்காரம், 100 மி.லீ. கை கழுவும் திரவம், 90 கிராம் சோயா மீற், சதொச சலவை சவர்க்காரம் என்பன இப்பொதியில் அடங்கியிருக்கும்.

இதன்மூலம் நுகர்வோர் 1750 ரூபா நிவாரணத்தைப் பெற முடியும் என அமைச்சர் கூறினார்.

லங்கா சதொச விற்பனை நிலையங்கள் இல்லாத பிரதேசங்களிலுள்ள மக்கள் 1998 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து தமது பொதிகளை வீடுகளுக்குப் பெற முடியும் என அமைச்சர் தெரிவித்தார்.

## கோட்டாபய ஆட்சி...

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கோட்டாபயவின் ஆட்சி ஏற்கனவே கவிழ்ந்து விட்டதாகவே கருதுகின்றேன். இன்று ஆட்சியாளர்கள் இருப்பதாக தெரியவில்லை, ஆனால் இருப்பதாக சொல்லி நாட்டை மென்மேலும் ஒரு இருண்ட யுகத்துக்குள்ளே கொண்டு வருகிறவர்கள், அகற்றப்படவேண்டும் என்பதிலே மாற்றுக் கருத்து கிடையாது தென்னிலங்கையிலே இதற்கான எதிர்ப்பு போராட்டங்கள் ஆரம்பமாகியிருக்கின்றன.

மக்களாக இந்த போராட்டங்களை நடத்துகிறார்கள், அரசியல் தலைவர்கள் முன்வந்து இந்த மாற்றத்தை செய்வோம் என எதிர்பாரக்கின்றோம் எனவும் தெரிவித்தார்

நேற்று இடம்பெற்ற இந்நிகழ்வில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை தவிசாளர் ஐங்கரன், முன்னாள் மாகணசபை உறுப்பினர் ச.சுகிர்தன், இளைஞர் அணி செயற்பாட்டாளர் தயாபரன் , பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் எஸ் தியாகலிங்கம் உட்பட பலரும் கலந்து கொண்டனர்

## எரிபொருள்...

எரிபொருள் நெருக்கடி காரணமாக எதிர்காலத்தில் மின்சார நெருக்கடி மேலும் அதிகரிக்கலாம் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

தற்போதைய நெருக்கடி நிலையுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 3000 மெற்றிக் தொன் டீசலை இலங்கை மின்சார சபைக்கு வழங்குவதாக உறுதியளித்துள்ளது.

எவ்வாறாயினும், திட்டமிட்டபடி எரிபொருள் கிடைக்காவிட்டால் இன்றும் மின்சாரம் துண்டிக்கப்படும் என இலங்கை மின்சார சபையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## தேவாலயத்தில்...

பொரளை கிறிஸ்தவ தேவாலயத்தில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவத்தின் பின்னால் முக்கிய சூத்திரதாரி ஒருவர் உள்ளார் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பினை கட்டியெழுப்புவதில் அரசாங்கம் அடைந்துள்ள முன்னேற்றத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்கான சதியாக இது இருக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

கர்தினால் மெல்கம் ரஞ்சித் வெளியிட்டுள்ள கருத்துகள் குறித்து தனது கருத்தினை வெளியிட்டுள்ள சரத் வீரசேகர ஐந்து மணியளவிலேயே சம்பவம் குறித்து தெரிவிக்கப்பட்டதால் சந்தேநபரை கைதுசெய்வதற்காக சிசிடிவியில் மூன்று மணிக்கு பின்னர் பதிவான காட்சிகளையே பொலிஸார் விசாரணை செய்தனர் என தெரிவித்துள்ளார்.

கொழும்பில் மருத்துவமனையொன்றில் கைக்குண்டு மீட்கப்பட்டது போன்ற சம்பவமாக இது இருக்கலாம். பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கத்தின் முன்னேற்றத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் முயற்சியாக இருக்கலாம் என சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தை செயலிழக்கச் செய்வதன் மூலம் இலங்கையை பாதுகாப்பற்ற இடமாக சித்திரிப்பதற்கு முயலும் தனிநபர் அல்லது குழுவினரை கைதுசெய்வதற்கான முயற்சிகளை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர் என சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

## விவசாயிகளின்...

இந்நாட்டின் பெரும்பான்மை யார் என்றால் தெற்கிலே சிங்களவர்களையும், வடக்கிலே தமிழர்களையும், கிழக்கிலே முஸ்லிம்களையும் கைகாட்டி விடுவார்கள். ஆனால், அது உண்மையல்ல. இந்நாட்டின் உண்மையான பெரும்பான்மையினர் விவசாயிகள்தான். விவாசாய குடும்பங்களைச் சார்ந்த ஐயாமார்களும் அம்மாமார்களும்தான். இது ஒரு விவசாய நாடு.

சூரிய பகவானை நோக்கி எங்கள் விவசாய விளைச்சலை அதிகரிக்க ஆசி புரி ஆண்டவா என நாம் வேண்டுகிறோம். ஆனால், விளைச்சலை எப்படி அதிகரிப்பது? எங்கே அதற்கு உரம்? உரம் இல்லை. இந்த அரசின் முட்டாள்தனமான கொள்கை காரணமாக உரம் இல்லை. விளைச்சல் அதிகரிப்பது ஒரு புறமிருக்க, இருப்பதும் குறைந்துவிட்டது. ஆகவே, விவசாயிகளின் சாபம் இந்த அரசை சும்மா விடாது - என தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன் கூறினார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் வருடாந்த பொங்கல் விழா, கொழும்பு வெள்ளவத்தை காலி வீதி சந்தைக்கு எதிரில் நடைபெற்றது. ஜமமு கட்சி உறுப்பினர்கள், சிறப்பு விருந்தினர் ரெலோ கட்சி பேச்சாளர் சுரேன் குருசுவாமி ஆகியோருடன் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய கட்சித் தலைவர் மனோ கணேசன் எம்பி மேலும் கூறியதாவது,

தை பிறந்தால் வழி பிறகும் என நாம் பாரம்பரியமாக கூறி வருகிறோம். தீர்வு பிறக்கும் எனவும் கூறி வருகிறோம். இந்த வருடம் தை இன்று பிறந்துள்ளது. இந்த தையில் தீர்வு பிறக்கவில்லை. ஆனால், தீர்வுக்கான வழி பிறந்துவிட்டது என நான் எண்ணுகிறேன். அதோ தீர்வு வருகிறது என கை காட்டக்கூடிய, குறி சொல்லக்கூடிய வழி பிறந்துவிட்டது என நான் எண்ணுகிறேன்.

நாட்டின் நெல் விளைச்சலை, காய்கறி விளைச்சலை, கிழங்கு விளைச்சலை அதிகரிக்க வேண்டுமென்றால் அதற்கு கட்டாயமாக உரம் தேவை. இன்று இந்நாட்டில் இந்த அரசின் முட்டாள்தனமான கொள்கை காரணமாக உரம் இல்லை. அதனால் விளைச்சலை அதிகரிக்க சூரிய பகவானை கைகூப்பி வணங்கும், நன்றி தெரிவிக்கும் இந்த நல்ல நாளில், விவசாயிகளின் துன்பத்தை கரிசனையில் எடுக்கவேண்டியுள்ளது.

இது ஒரு விவசாய நாடு. விவசாய மக்கள் மத்தியில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பௌத்தர், இந்து, இஸ்லாமியர், கத்தோலிக்கர் இருக்கின்றார்கள். இந்நாட்டின் உணமையான பெரும்பான்மையினர் விவசாய குடும்பங்களை சார்ந்த ஐயாமார்களும் அம்மாமார்களும்தான். இந்த பெரும்பான்மையினரை இந்த அரசாங்கம் ஆபத்தில் போட்டுவிட்டது. ஆகவே விவசாயிகளின் சாபம் இந்த அரசை சும்மாவிடாது - என்றார்.

## பொரளை தேவாலயத்தில்...

பொரளை ஆனந்த ராஜகருணா மாவத்தையிலுள்ள தேவாலய வளாகத்திலிருந்து கைக்குண்டு மீட்கப்பட்ட தினத்தில் தேவாலயத்திற்கு வருகை தந்ததாகக் கூறப்படும் சந்தேகநபரை கைதுசெய்வதற்காக கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் 02 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் அருட்தந்தையினால் வழங்கப்பட்ட வாக்குமூலத்திற்கமைய, விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், பாதுகாப்பு கெமராவும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பொரளை ஆனந்த ராஜகருணா மாவத்தையிலுள்ள தேவாலய வளாகத்தில் திருச்சொரூபத்திற்கு அருகிலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை (11) கைக்குண்டொன்று மீட்கப்பட்டது.

பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரால் கெம்பல் மைதானத்தில் அன்றைய தினமே குண்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

சம்பவம் தொடர்பில் இதுவரை நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தெமட்டகொட பகுதியைச் சேர்ந்த குறித்த சந்தேகநபர், சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபருடன் தொடர்புகளை பேணியுள்ளதுடன், கைக்குண்டை தேவாலய வளாகத்திற்குள் வைத்தமையுடன் தொடர்புபட்டுள்ளதாக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர், நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள மேலும் மூன்று சந்தேகநபர்கள், தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைத்து விசாரணைக்குட்படுத்தப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## சுதந்திரக் கட்சி...

"ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கூட்டு அரசில் பிரதான வகிபாகத்தை ஸ்ரீரீலங்கா சுதந்திரக் கட்சி வகிக்கின்றது. இந்த அரசிலிருந்து சுதந்திரக் கட்சி வெளியேறினால் அரசு கவிழ்வது உறுதி." – இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்ரிபால சிறிசேன எம்.பி. தெரிவித்தார்.

'அரசின் கொள்கைகள் பிடிக்கவில்லையெனில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கௌரவமான முறையில் வெளியேறவேண்டும்' என்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் இருந்துகொண்டு எமக்கு சவால்விடும் சிறியவர்களும், பெரியவர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்துதான் அரசியலை ஆரம்பித்தார்கள். சுதந்திரக் கட்சிதான் அவர்களின் அரசியல் வாழ்வுக்கு முகவரி கொடுத்தது. இதை மறந்து அவர்கள் செயற்படுகின்றார்கள்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கூட்டணி வெற்றியடைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே பிரதான காரணம். இந்நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசில் பிரதான வகிபாகத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வகிக்கின்றது. அரசிலிருந்து சுதந்திரக் கட்சி வெளியேறினால் அரசு கவிழ்வது உறுதி.

இதை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமை புரிந்துகொள்ளும். அரசைக் கவிழ்ப்பது எமது நோக்கமல்ல. எனினும், அரசு தவறான பாதையில் தொடர்ந்து பயணித்தால் பிரதான பங்காளிக் கட்சியான நாம் அதிலிருந்து வெளியேறவும் தயங்கமாட்டோம்" – என்றார்.

## கொழும்பு தேவாலய...

பிற்பகல் 3 மணிமுதல் சிசிடிவி காட்சிகளை ஆராய்ந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆனால் அருட்தந்தையர்கள் காலையில் இருந்தே சி.சி.ரி.வி. காட்சிகளை அவதானித்து, 9.52 மணியளவில் ஒருவர் வந்து எதையோ விட்டுச்சென்ற சம்பவத்தை அவதானித்ததாக தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் வெளிப்படுத்திய விசாரணை தகவல்களை நிராகரித்த பேராயர், உண்மையை வெளிப்படுத்துவதற்குப் பதிலாக உருவாக்கிய கதைகளை பொலிஸார் முன்வைப்பதாக குற்றம் சாட்டினார்.

சம்பவத்தன்று காலையில் சி.சி.ரி.வியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடந்துகொண்ட ஒரு நபரை விசாரிக்காமல், தேவாலயத்தில் பணிபுரியும் ஒருவரைக் கைதுசெய்ததற்காக பொலிஸாரை பேராயர் விமர்சித்தார்.

இது ஒரு சதி என்றும், அரசியல்வாதிகள்போல் நேர்மையற்ற முறையில் பொலிஸார் நடந்து கொள்ளக்கூடாது என்றும், அப்படியானால் சீருடைகளை கழற்ற வேண்டும் என்றும் அவர் கூறினார்.

# சமிக்ஞை பிரச்சினையால் பொடி மெனிக்கே புகையிரதம் இடைநிறுத்தம்!

## பயணிகள் நேற்று பெரும் அசௌகரியம்













(க.கிஷாந்தன்)

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கி பயணித்த பொடிமெனிக்கே புகையிரதம் சமிக்ஞை பிரச்சினை காரணமாக கொட்டகலை ரயில் நிலையத்தில் நேற்று (14) தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

இதனால் குறித்த ரயிலில் வந்த பயணிகள் அமைதியற்ற வகையில் செயற்பட்டதுடன், ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியை கொட்டகலை நகரில் மறித்து ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

புகையிரத நிலைய அதிபர்கள் சங்கம் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை நிறைவு செய்வதாக அறிவித்த சில மணித்தியாலங்களில் மீண்டும் அவர்கள் அவசரமாக மறுபடியும் வேலைநிறுத்தத்தை ஆரம்பித்தனர்.

இதன்படி கொட்டகலை ரயில் நிலையம் மூடப்பட்டதன் காரணமாக கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கி பயணித்த பொடிமெனிக்கே ரயில் நேற்று (14) மதியம் 12.45 அளவில் கொட்டகலையில் இடைநடுவே நிறுத்தப்பட்டது.

இதனால் ஹட்டன் மற்றும் திம்புளை - பத்தனை பொலிஸார் இணைந்து ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியின் கொட்டகலை புகையிரத நிலையத்திற்கு அருகிலுள்ள புகையிரதக் கடவைக்கு பலத்த பாதுகாப்பு வழங்கி கொட்டகலை ரயில் நிலையம் வரை குறித்த ரயிலை பாதுகாப்புடன் அழைத்துச் சென்றனர்.

மேற்படி நடவடிக்கையால் நீண்ட விடுமுறை காரணமாக வெளியிடங்களுக்கு செல்வோரும், தைப்பொங்கல் பண்டிகையை கொண்டாட சொந்த ஊருக்குச் செல்லும் தமிழ் மக்கள் என ஏராளமான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் இதனால் கடும் சிரமங்களுக்கும், பல்வேறு அசௌகரியங்களுக்கும் உள்ளாகினர்.

போராட்டக்காரர்கள் கட்டுக்கடங்காமல் கொட்டகலை நகரில் சென்று போராட்டத்தில் ஈடுபட்டதால் நகர வீதியில் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் கூறினார்.

ஹட்டன் பொலிஸ் நிலையத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் திம்புளை - பத்தனை பொலிஸ் நிலைய அதிகாரிகள் இணைந்து ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு நிலைமையை விளக்கி ஹட்டன் இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போவிலிருந்து ஏழு பஸ்களினூடாக நுவரெலியா மற்றும் பதுளை நகரங்களுக்கு பயணிகளை அனுப்பிவைத்தனர்.

## முச்சக்கரவண்டி விபத்தில் 08 மாத குழந்தை பலி

### பசறையில் சோகம்

பதுளை - பசறை பிரதான வீதியின் ஐந்தாம் கட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் (13) முச்சக்கரவண்டி ஒன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் 08 மாத குழந்தை ஒன்று உயிரிழந்தது.

முச்சக்கரவண்டியைக் குழந்தையின் தாயே செலுத்தியதாகவும் அவருக்கு சாரதி அனுமதிப்பத்திரம் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் சம்பவத்தில் காயமடைந்த குறித்த தாய் மற்றும் முச்சக்கரவண்டியில் பயணித்த மற்றுமொரு ஆண் ஆகியோர் பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## 2021 அதிவேக நெடுஞ்சாலையில் 8.8 பில்லியன் ரூபா வருமானம்

கடந்த ஆண்டு அதிவேக நெடுஞ்சாலைகளினூடாக 8.8 பில்லியன் ரூபாவுக்கும் அதிக தொகை ஈட்டப்பட்டுள்ளது.

ஆண்டொன்றில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினூடாக ஈட்டப்பட்ட அதிக தொகை இதுவென தெரிவிக்கப்படுகின்றது.

2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டு வருவாய் 21 சதவீதம் அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கடந்த ஆண்டு 4.5 பில்லியன் ரூபா ஈட்டப்பட்டுள்ளது.

## 12 ஆயிரம் சட்டவிரோத சிகரெட்டுகளுடன் இருவர் கைது

தீர்வை வரியின்றி சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட 10 இலட்சம் ரூபா பெறுமதியான 12 ஆயிரம் சிகரெட்டுகளுடன் இருவர், கொள்ளுபிட்டி நகர பொது சந்தைதொகுதியில் வைத்து விசேட அதிரடிப்படையினரால் நேற்று (14) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாமின் கட்டளை அதிகாரி பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி வருண ஜயசுந்தரவின் வழிகாட்டலுகமைய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரோய் சுமனவர்தன மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் சாகர ஆகியோரின் ஆலோசனையில் மேல் மாகாண விசேட சுற்றிவளைப்புப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கிடைத்த தகவலுக்கமைய பீ.எஸ்.எச்.பீரிஸ் உள்ளிட்ட குழுவினரால் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டதாகவும் கொள்ளுப்பிட்டி நகர பொதுச்சந்தை தொகுதியில் பழங்கள் விற்பனைசெய்யும் போர்வையில் மிக சூட்சுமமாக நீண்டகாலம் இவர்கள் சட்டவிரோதமாக வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட சிகரெட்டுகளை விற்பனை செய்து வந்துள்ளதாகவும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

மாலபே மற்றும் கடவத்தை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 57 மற்றும் 54 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், சிகரெட்டு தொகை மேலதிக விசாரணைகளுக்காக கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## சதொச பூண்டு மோசடியில் பாதிக்கப்பட்ட இருவருக்கு கொலை மிரட்டல்

கடந்த காலங்களில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய சதொச பூண்டு மோசடியில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு தற்போது கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சதொச சார்பில் பூண்டுகளை இலங்கைக்கு இறக்குமதிசெய்த நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் இருவருக்கே இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு இதற்கு முன்னரும் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் கோட்டை காவல்துறையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த 11ஆம் திகதியும் குறித்த நபர்களுக்கு தொலைபேசி ஊடாக கொலைமிரட்டல் விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட தரப்பினர் நேற்று முன்தினம் (13) குற்றங்கள் மற்றும் சாட்சிகளில் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு விஜயம்செய்து இதுகுறித்து தெரிவித்திருந்தனர்.

தமக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் தொடர்பில் நேற்று (14) குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யவுள்ளனர்.

## வவுனியா,கெப்பித்திகொல்லாவ வீதியில் விபத்து!

### 11 ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் படுகாயம்




(அநுராதபுரம் நிருபர்)

வவுனியா, கெப்பித்திகொல்லாவ ஏ-22 பிரதான வீதியின் கெலேபுளியன்குளம் பகுதியில் நேற்று முன்தினம் (13) பஸ்ஸுடன் ரிப்பர் மோதி இடம்பெற்ற விபத்தில் 11 ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக கெப்பித்திகொல்லாவ பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5.45 மணியளவில் கெப்பித்திகொல்லாவ, கெலேபுளியன்குளம் பகுதியில் இடம் பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

ஒன்பது பெண் ஊழியர்களும் பஸ்ஸின் சாரதி உட்பட மூன்று ஆண்களுமே இவ்வாறு காயங்களுக்குள்ளாகியுள்ளனர். இரு பெண் ஊழியர்கள் பலத்த காயமடைந்துள்ளதுடன், ஏனையவர்களுக்கு சிறிய காயங்கள் ஏற்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.


வவுனியா பகுதியிலுள்ள ஆடைத்தொழிற் சாலையில் கடமைபுரியும் ஊழியர்களை நேற்று மாலை தமது சொந்த இடங்களுக்கு அழைத்துச் சென்றபோது இரண்டு பஸ்களுடன் ரிப்பரொன்று மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதுடன் காயமடைந்த ஊழியர்களை கெலேபுளியன்குளம் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் வவுனியா வைத்திய சாலையில் அனுமதித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை களை கெப்பித்திகொல்லாவ பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## எமது கட்சிக்கு முன்னுரிமை அளிப்பதை பங்காளிகள் ஏற்றுக்கொள்கிறார்கள்

### சி.வி.விக்னேஸ்வரன் பாராட்டு

(யாழ் நிருபர்)



எமது பங்காளிக் கட்சிகளை நாங்கள் பாராட்ட வேண்டும். எமது கட்சிக்கு முன்னுரிமை அளிப்பதை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். அதனால் அவர்களுடன் இணைந்து செயற்படுவது இலகுவாக உள்ளதென தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் செயற்குழுக் கூட்டம் கட்சியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் (13) யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எமது கட்சியின் பதிவின் பின்னர் இன்று முதலாவது செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. மக்கள் பொருளாதார ரீதியாக பலமிழந்து காணப்படுகின்றார்கள். இந்நிலையில், நாங்கள் எந்தளவுக்கு கட்சி என்ற ரீதியில் மக்களுக்கு என்ன செய்யவேண்டும் என்பது சம்பந்தமாக பேசியுள்ளோம். அந்தவகையில் வீட்டுத்தோட்டம் காளான் வளர்ப்பு பற்றி ஆராய்ந்தோம். எங்களால் முடிந்த புலம்பெயர் உறவுகளுடன் இணைந்து மக்களுக்கு பொருளாதார ரீதியாக உதவிசெய்ய முடியும் என்று பேசியுள்ளோம்.

தவழ்ந்துவிட்டு தற்பொழுது எழுந்துநிற்கும் கட்சியாக நாங்கள் இருக்கின்றோம். அடிமட்டத்தில் மக்களின் ஆதரவை நாங்கள் உறுதிசெய்ய வேண்டும். அடிமட்டத்தில் மக்களிடம் வேலை செய்ய வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

இளைஞர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். அதேவேளை, தலைவர்கள் மூத்தவர்களின் அனுபவங்களும் அறிவும் அரசியல் ஞானமும் இளைஞர்களின் வீரியமும் சேர்ந்து எமது கட்சியைக் கொண்டுநடத்தும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கின்றது. கொரோனா, நாடாளுமன்ற நடவடிக்கைகள் காரணமாக கடந்த ஒரு வருடத்தில் எமது கட்சியின் செயற்பாடுகள் குறைந்தளவிலேயே நடந்திருந்தது. வேகமாக கட்சியின் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்

இதுவரைகாலமும் நாங்கள் கூட்டணி என்ற வகையில் ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டோம். என்னுடைய கருத்து என்னவென்றால், ஒவ்வொரு பங்காளிக் கட்சியும் தம்மை பலப்படுத்த வேண்டும். பின்னர் தேர்தல் காலத்தில் எல்லோரும் சேர்ந்து பொதுச் சின்னத்தில் முன்னிறுத்தி முகங்கொடுக்கவேண்டும்.

எமது பங்காளிக் கட்சிகளை நாங்கள் பாராட்ட வேண்டும். எமது கட்சிக்கு முன்னுரிமை அளிப்பதை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். அதனால் அவர்களுடன் இணைந்து செயற்படுவது இலகுவாக உள்ளது - என்றார்.

தமிழ்க் கட்சிகள் பொதுவாக கூட்டிணைந்து போட்டியிடுவது தொடர்பில் கேள்வி எழுப்பிய போது,

வஞ்சகம் இல்லாத நிலையில் ஒவ்வொரு கட்சியும் முன்வந்தால் இணைந்து செயற்படலாம். உள்ளே ஒரு காரணத்தை வைத்துகொண்டு சேர்ந்து செல்வோம் என்று கூறிக்கொண்டு இறுதிநேரத்தில் வெளியில் தள்ளுவதை ஏற்கமுடியாது. எல்லோரும் சேர்ந்து செயற்பட முடியும் என்றால் அதனை நான் வரவேற்கின்றேன். ஆனால், அதற்கு பல சிக்கல்கள் இருக்கின்றன - என்றார்.

## இன்று வெளியாகவுள்ள ஒமிக்ரொன் தொடர்பான மேலுமொரு அறிக்கை

ஒமிக்ரொன் தொற்றுக்குள்ளானவர்கள் தொடர்பில் மேலுமொரு பரிசோதனை அறிக்கை இன்று (15) வெளியாகவுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட கொரோனா 182 மாதிரிகள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனை அறிக்கையே இவ்வாறு வெளியாகவுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வைத்திய பீட ஒவ்வாமை மற்றும் நோயெதிர்ப்பு மூலக்கூறு பிரிவின் பிரதானியும் பேராசியருமான வைத்தியர் சந்திம ஜீவேந்திர தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட் டுள்ளதாவது,

இவ்வாறு கிடைக்கப்பெற்ற மாதிரிகளில் அநேகமான மாதிரிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஆய்வுகூடங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டவையாகும்.

அதற்கமைய, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தனவிடம் இன்று கையளிக்கப்படும். இதுவரையில் 42 பேர் வரையில் ஒமிக்ரொன் தொற்றுக்குள்ளானவர்களாக அடையாளங்காணப்பட்டுள்ளனர்.

எது எவ்வாறாயினும் நாட்டில் தற்போது வெகு விரைவாக டெல்ட்டா தொற்றே பரவலடைந்து வருகின்றது என்று குறிப்பிட்டுள்ளார்.










எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் பங்கேற்புடன் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (14) இடம்பெற்ற தைப்பொங்கல் தின நிகழ்வுகள்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2022, ஜனவரி 15ஆம் திகதி, சனிக்கிழமை**

# இலங்கை எதிர்கொள்ளும் நெருக்கடி

தற்போதைய பணவீக்க அதிகரிப்புக்கு உலகளாவிய விலையேற்றமே காரணம் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

கொவிட்-19 தொற்றால் அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் பணவீக்கம் கடுமையாக அதிகரித்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், தேவையான நிதி மற்றும் கொள்கை தீர்மானங்களை சரியான நேரத்தில் எடுக்க இலங்கை மத்திய வங்கி தயாராக உள்ளது எனவும் அவர் வலியுறுத்தினார்.

அத்தியாவசியப் பொருட்களின் விண்ணை முட்டும் விலை, வறுமை, உணவுப் பஞ்சம் இதை நோக்கித்தான் நாட்டின் பொருளாதாரம் சென்றுகொண்டிருக்கிறது. நாட்டின் பொருளாதாரத்தில் 10 சதவீதம் சுற்றுலாத்துறையின் மூலம் கிடைக்கிறது. அதன்பின் தேயிலை, ஆயத்த ஆடைகள் ஏற்றுமதி மூலம் அந்நியச் செலாவணி கிடைக்கிறது. ஆயத்த ஆடைகள், தேயிலை ஏற்றுமதி, சுற்றுலாவின் மூலம் கிடைக்கும் வருவாய் ஆகியவற்றை சார்ந்துதான் நாட்டின் பொருளாதாரமே இயங்கிக்கொண்டிருக்கிறது. மொத்த ஏற்றுமதியில் ஆயத்த ஆடைகளின் பங்கு 52 சதவீதமாகவும், தேயிலை ஏற்றுமதி 17 சதவீதமாகவும் இருக்கிறது.

2019ஆம் ஆண்டின் 2ஆம் காலாண்டில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு 1.1 சதவீதமாக இருந்த நிலையில் 2020ஆம் ஆண்டில் கொரோனா பெருந்தொற்று காரணமாக பொருளாதாரம் பாதாளத்துக்குச் சென்று மைனஸ் 16.3 சதவீதம் என வரலாறு காணாத கடும் வீழ்ச்சியைச் சந்தித்தது.

2021, நவம்பர் நிலைவரப்படி இலங்கை அரசிடம் 160 கோடி அமெரிக்க டொலர்தான் அந்நியச் செலாவணி கையிருப்பாக அடுத்த 12 மாதங்களுக்கு இருக்கிறது. ஆனால், வெளிநாட்டுக் கடன் மற்றும் உள்நாட்டுக் கடனாக இலங்கை அரசும், தனியார்துறையும் 730 கோடி டொலர் செலுத்த வேண்டும். இதில் 500 கோடி டொலர் சர்வதேச கடன் பத்திரங்களாக இருக்கின்றன. இந்தக் கடனை 2022, இம்மாத இறுதிக்குள் செலுத்தவேண்டிய நிலை.

பொருளாதார வல்லுநர்களின் ஆய்வறிக்கையின்படி, கடந்த 10 ஆண்டுகளாக இலங்கை அரசு இருவிதமான பற்றாக்குறையைச் சந்தித்து வருகிறது. ஒன்று வர்த்தகப் பற்றாக்குறை, இரண்டாவதாக நிதிப் பற்றாக்குறை.

கடந்த 2014ஆம் ஆண்டிலிருந்தே இலங்கை அரசின் சர்வதேச கடன் அதிகரித்து வந்திருக்கிறது. 2019ஆம் ஆண்டில் சர்வதேச கடன் 42.6 சதவீதமாக அதிகரித்துவிட்டது. டொலரின் மதிப்பில் கூறினால் 2019ஆம் ஆண்டில் இலங்கையின் சர்வதேச கடன் 3,300 கோடி டொலராகும். இந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தாமல் மேலும் மேலும் கடனை வாங்கியும், உள்நாட்டில் அதிகமான பணத்தை அச்சடித்து வெளியிட்டதாலும் மிகப்பெரிய பொருளாதாரப் பேரழிவை நாடு சந்தித்து வருகிறது.

இதன் காரணமாகவே சர்வதேச பொருளாதார ரேட்டிங் நிறுவனங்களான ஸ்டாண்டர்ட் அண்ட் பூர்ஸ், மூடிஸ், பிட்ச் ஆகியவை இலங்கையின் சர்வதேச கடன் தரத்தை பியிலிருந்து சிக்கு இறக்கிவிட்டனர். இதனால் சர்வதேச அளவில் கடன் பத்திரங்கள் மூலம் கடன் பெறுவது இலங்கைக்குக் கடினமாகி வங்குரோத்து நிலைக்குச் செல்லும்.

இலங்கைக்கு இருக்கும் மிகப்பெரிய அளவிலான வெளிநாட்டுக் கடனில் பெரும்பகுதி சீனாவுக்குச் செலுத்தவேண்டியவை. சீனாவுக்கு மட்டும் இலங்கை 500 கோடி டொலர் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளது. இதுதவிர, கடந்த ஆண்டு பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க 100 கோடி டொலர் கடனும் வாங்கி அதனை தவணை முறையில் செலுத்த அரசு முடிவுசெய்துள்ளது.

ஆனால், அரசிடம் இப்போதிருக்கும் அந்நியச் செலாவணி கையிருப்பு இந்த மாதத்தோடு முடிந்துவிடும். அடுத்துவரும் செலவுகளைச் சமாளிக்க குறைந்தபட்சம் 43.70 கோடி டொலராவது தேவைப்படும். 2022ஆம் ஆண்டு பெப்ரவரி முதல் ஒக்டோபர் வரையிலான வெளிநாட்டுக் கடன் சேவையில் 480 கோடியை எவ்வாறு சமாளிக்கப் போகிறதென்பது மிகப்பெரிய பிரச்சினையாகும்.

2019ஆம் ஆண்டு 750 கோடி அந்நியச் செலாவணி கையிருப்பு வைத்திருந்த அரசு 2021 ஜூலை மாதம் 280 கோடியாகக் குறைந்தது. அந்நியச் செலாவணி கையிருப்பு கரைந்தது, இறக்குமதிக்காகவும் அந்நியச் செலாவணி அதிகமாக செலவிடப்பட்டது. அந்நியச் செலாவணி குறைந்ததால், நாட்டின் பணத்தின் மதிப்பும் குறைந்தது, கடந்த ஆண்டில் மட்டும் 8 சதவீதம் சரிந்துள்ளது. பணத்தின் மதிப்பு குறைந்ததால் அத்தியாவசிய பொருட்களின் விலைகளில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், நாட்டில் உணவுப் பொருட்களின் விலை விண்ணை முட்டும் அளவுக்குச் சென்றுவிட்டது. நாட்டில் பணவீக்கத்தின் அளவு இதுவரை கண்டிராத அளவு 11.1 சதவீதமாக அதிகரித்துவிட்டது.

நாட்டில் அரிசி, கோதுமை, பருப்பு, சீனி, வெங்காயம் என அத்தியாவசிய உணவுப் பொருட்கள் விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்து வருகிறது. எரிவாயு அடுப்பில் சமைத்தவர்கள் மண்ணெண்ணெய் அடுப்புக்கும், மண்ணெண்ணெய் அடுப்பில் சமைத்த மக்கள் விறகு அடுப்புக்கும் மாறிவிட்டார்கள். 3 வேளை சாப்பிட்ட மக்கள் 2 வேளைக்கும், 2 வேளை சாப்பிட்ட மக்கள் ஒருவேளைக்கும் மாறிவருகிறார்கள்.

இந்தளவு பொருளாதாரச் சிக்கலில் இலங்கை இன்னமும் சீனாவின் பிடிக்குள் சிக்கித்தவிக்கிறது.

நாட்டுக்கு இருக்கும் மிகப்பெரிய அளவிலான வெளிநாட்டுக் கடனில் பெரும்பகுதி சீனாவுக்குச் செலுத்தவேண்டியவை. சீனாவுக்கு மட்டும் இலங்கை 650 கோடி டொலர் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளது.

கடனுக்காகவும், பொருளாதார மீட்சிக்காகவும் சீனாவை அதிகம் சார்ந்திருக்கும் இலங்கையின் இந்தச் செயல், இலங்கையை சீனாவினுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிடும் என்று எதிர்க்கட்சிகளும் பொருளாதார வல்லுநர்களும் எச்சரித்தாலும் அரசு அவற்றை கண்டுகொள்வதாக இல்லை. எதிர்க்கட்சிகள் அல்லது பொருளாதார நிபுணர்களின் விமர்சனங்களை அரசு மதிப்பதே இல்லை.

ஏற்கனவே, அம்பாந்தோட்டை துறைமுக மேம்பாட்டுக்காக சீனாவிடம் பெற்ற 1400 கோடி டொலர் கடனை அடைக்க 2017ஆம் ஆண்டிலிருந்து 99 ஆண்டுகளுக்கு அந்த துறைமுகத்தை சீனாவிற்கு குத்தகைக்கு விட்டுள்ளது இலங்கை அரசு. இது மட்டுமன்றி, அம்பாந்தோட்டை விமான நிலையம், தெற்கு நெடுஞ்சாலை, அனல்மின் நிலையம், கொழும்பு துறைமுக நகரம் உள்ளிட்ட பல திட்டங்களின் மூலமும் இலங்கையில் சீனா ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

சீனாவுக்குத் தரவேண்டிய கடன் தொகையை பொருளாதாரப் பிரச்சினையைக் காரணங்காட்டி தள்ளுபடி செய்யவேண்டும் என்று அண்மையில் கொழும்பு வண்ணத்தை சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யிடம் பிரதமர் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்திருந்தார்.

இலங்கை அரசு தனக்கிருக்கும் வெளிநாட்டுக் கடனை அடைக்க சீனாவின் உதவியையே அதிகம் நாடி வருகிறது. இலங்கையின் பட்ஜெட்டுக்குத் தேவையான 130 கோடி டொலர் கடன்கூட சீன மேம்பாட்டு வங்கியிலிருந்து இலங்கை பெற்றது . கடந்த 2006 முதல் 2019ஆம் ஆண்டுவரை இலங்கையின் கடல்வழி உட்கட்டமைப்புக்கு 1200 கோடி டொலரை சீனா முதலீடு செய்திருக்கிறது.

கொரோனாவால் ஏற்பட்ட பொருளாதார பாதிப்பினை கருத்திற்கொண்டு இந்த நிலைமையைச் சாதகமாக்கிக்கொண்டு, இலங்கையைத் தங்கள் பக்கம் சாய்க்கவும், பொருளாதார அடிமையாக மாற்றவும் சீனா முயன்று வருகிறது. இலங்கையின் இப்போதைய பொருளாதார நெருக்கடிக்கு இந்தியா கைகொடுக்கலாமென தெரிகிறது. என்றாலும் அந்த உதவிகள் இலங்கைக்கு உடனடி நிவாரணத்தை வழங்கிவிடாது. சீனாவிடமும் இந்தியாவிடமும் கையேந்தி இலங்கை பொருளாதார நெருக்கடிக்கு அப்பால் இராஜதந்திர நெருக்கடிக்குள்ளும் விழப்போவதாகவே தெரிகிறது.

# விற்றமின் பி தொகுதியின் முக்கியத்துவம்



வாசினி யுகேந்திரன் -
போசணையாளர்
யாழ்.போதனா
வைத்தியசாலை

**கடந்த வார தொடர்ச்சி**

விற்றமின் பி பசி உணர்வை தூண்டுவதற்கும் சிறந்த பார்வை திறனுக்கும் மேலும் ஆரோக்கியமான தோல், நரம்புத்தொகுதியின் தொழிற்பாடுகளுக்கும் உதவுகின்றது. அத்துடன், குருதியிலுள்ள சிவப்பணுக்களின் உற்பத்தி போன்றவற்றுக்கும் உதவுகின்றது. மேலும் இவ்விற்றமின் கரு தரிக்க காத்திருப்பவர்கள், கர்ப்பிணிப் பெண்கள் மிகவும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் இக்காலத்தில் இவ்விற்றமின் குறைபாடு ஏற்படின் குழந்தைகளுக்கு முள்ளந்தண்டு சம்பந்தமான குறைபாடு ஏற்படுவதற்கு ஏதுவாக அமைகின்றது என யாழ். போதனா வைத்தியசாலையின் போசணையாளர் வாசினி யுகேந்திரன் 'தமிழன்' நாளிதழுக்கு தெரிவித்தார்.

அவருடனான உரையாடல் வருமாறு,

விற்றமின்கள் மனித உடலுக்கு மிகவும் முக்கியமான போசாக்கு மூலக்கூறு ஆகும். இவை உணவிலிருந்து கிடைக்கின்றன. விற்றமின் பி மற்றும் சி ஆகிய இரு விற்றமின்களும் நீரில் கரையக்கூடியன. இவை உடலில் சேமித்துவைக்கப்படுவதில்லை. எனவே, நபர் ஒருவர் ஒவ்வொரு நாளும் தேவையான அளவில் இவ்விற்றமின்களை உணவில் எடுத்துக்கொள்ளுதல் அவசியமானதாகும். அத்துடன் தேவையான அளவை விட அதிகளவில் எடுத்துக்கொள்வாறாயின் மேலதிகமாக விற்றமின் பி மற்றும் சி ஆனது சிறுநீரின் மூலம் வெளியேற்றப்படுகின்றது.

நீரில் கரையக்கூடிய விற்றமின்களான பி மற்றும் சி ஆகியவை மிக எளிதாக விரயமாக்கப்படும் மற்றும் அழிக்கப்படும். அதாவது இவ்விற்றமின்கள் உள்ள உணவுகளை நீரில் கழுவும்போதும் சேமித்து வைக்கப்படும்போதும் மற்றும் உணவு தயாரிப்பின்போதும் இவ்விற்றமின்கள் விரயமாக்கப்படுகின்றன. இவ்விற்றமின் இழப்பினை குறைப்பதற்கு உணவானது கடுமையான சூரிய ஒளியில் பாதுகாப்பதினை தவிர்த்தல் வேண்டும். அத்துடன் உணவு தயாரிப்பின்போது நீர் இழப்பினை குறைத்தல் வேண்டும்.

பொதுவாக எல்லாவகையான விற்றமின் பி உணவுகளிலும் சிறிய அளவிலிருந்து அதிகளவு வரை காணப்படுகின்றது. அத்துடன் விற்றமின்கள் அனைத்தினதும் பொதுவான தொழிற்பாடு ஊக்கியாக தொழிற்படுதல். அதாவது மாப்பொருள், புரதம், கொழுப்பிலிருந்து உடலுக்கு தேவையான சக்தி பெறப்படுகின்றது. இவ்விற்றமின்கள் உடலுக்குத் தேவையான சக்தியை பெற்றுக்கொள்வதற்கான ஊக்கியாக தொழிற்படுகின்றது. அத்துடன் விற்றமின் பி பசி உணர்வை தூண்டுவதற்கு, சிறந்த பார்வை, ஆரோக்கியமான தோல், நரம்புத்தொகுதியின் தொழிற்பாடு அத்துடன் குருதியிலுள்ள சிவப்பணுக்களின் உற்பத்தி போன்றவற்றுக்கு உதவுகின்றது. விற்றமின் பி ஆனது 8 தொகுதியாக பிரிக்கப்படுகின்றது. அவற்றினை பார்க்கலாம்.




**தயமின் பி1 (Thiamin B1)**

தயமின் பி1 ஆனது அவரை இன தானியங்கள், பன்றி இறைச்சி, ஈரல், பட்டாணி போன்ற உணவுகளில் அதிகளவில் காணப்படுகின்றது. பொதுவாக தைஜமின் ஆனது வளர்ந்த ஆண்களுக்கு 1.2 மி.கி. மற்றும் வளர்ந்த பெண்களுக்கு 1.1 மி.கி. ஆனது நாள் ஒன்றுக்கு தேவைப்படுகின்றது. இந்த விற்றமின் குறைபாடானது நன்றாக தீட்டிய தானியங்கள் போன்றவற்றில் காணப்படுகின்றது. இதனை மூன்று நேர உணவிலும் எடுத்துக்கொள்ள வேண்டும். தைஜமின் விற்றமின் குறைபாடு காணப்படுமாயின் மனக்குழப்பம், தசைகளின் பலவீனம், வளர்ச்சி குறைபாடு போன்றவை ஏற்படுகின்றன. நாள் ஒன்றுக்கு தேவைக்கு அதிகமாக விற்றமின் பி இனை எடுத்துக்கொள்பவர்களுக்கு பொதுவாக எந்தப் பிரச்சினையும் ஏற்படுவதில்லை.

**றைபோப்லவின் பி2 (Riboflavin B2)**

அடுத்த விற்றமின் பி ஆனது றைபோப்லவின் பி2 ஆகும். இவ்விற்றமின் ஆனது அதிகளவில் கடும் பச்சை இலை வகைகள் மற்றும் மரக்கறிகள், முட்டை, அவரை இன தானியங்கள், ஈரல், தவிடுள்ள தானியங்கள், பால் உணவில் அதிகளவில் காணப்படுகின்றன. இவ்விற்றமின்கள் ஆனது சூரிய ஒளியில் மிக எளிதாக அழியக்கூடியது. இவ்விற்றமின்கள் ஆனது மிகவும் முக்கியமான தொழிற்பாட்டுக்கு பயன்படுகின்றது. உணவிலிருந்து சக்தியினை பிரிப்பதற்கு மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றது. அத்துடன், சிறந்த பார்வை மற்றும் ஆரோக்கியமான தோல் போன்றவற்றுக்கு முக்கிய பங்கு வகிக்கின்றது. பொதுவான இவ்விற்றமின் குறைபாடுகள் ஏற்படுவது குறைவு. ஆனால், மது அருந்துபவர்கள், அதிகளவு தைரொக்சின் ஓமோன் சுரப்பு உள்ளவர்களுக்கு மற்றும் வயதுவந்தவர்களுக்கு இந்தக் குறைபாடு ஏற்படுகின்றது.

**நியாசின் பி3 Niacin (B3)**

அடுத்த விற்றமின் பி நியாசின் பி3 ஆகும். இவ்விற்றமின்கள் பொதுவாக அதிகளவில் மீன், கோழி இறைச்சி, தவிடுள்ள தானியங்கள், விதைவகைகள், ஈரல் போன்றவற்றில் காணப்படுகின்றன. இவ்விற்றமின் ஆனது சக்தி உற்பத்தி, சமிபாட்டினை ஊக்குவித்தல், ஆரோக்கியமான தோல் மற்றும் நரம்பு போன்ற தொழிற்பாட்டுக்கு உதவுகின்றது. இவ்விற்றமினால் பொதுவாக குறைபாடு ஏற்படுவது குறைவு. ஆனால், மது அருந்துபவர்கள், புரத குறைபாடுள்ளவர்கள் அத்துடன் அதிகளவில் தவிடு இல்லாத தானியங்களினை உண்பவர்களுக்கு இவ்விற்றமின் குறைபாடு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகளவில் காணப்படுகின்றன. இவ்விற்றமின் குறைபாடுள்ளவர்கள் மனக்குழப்பம், தசைப்பிடிப்புகள், வயிற்று குமட்டல், தோல் குறைபாடுகள் போன்றவற்றை ஏற்படுத்துவதாக அமைகின்றது. நாள் ஒன்றுக்கு தேவையான நியாசினை விட மிக அதிகளவில் supplement (குறைநிரப்பு குளிகைகள்) மூலம் தேவையான நியாசினை அதிகளவில் உட்கொள்ளும்போது தடிப்புகள் (தோல்) மற்றும் ஈரல் பழுதடைதல் போன்றவை ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. ஆனால், உணவின் மூலம் அதிகளவு நியாசின் எடுத்துக்கொள்வோமாயின் பெரிய அளவு பிரச்சினைகள் ஏற்படுவது குறைவு.

**பைரிடோக்சின் பி6 pyridoxine (B6)**

அடுத்து விற்றமின் பி பைரிடோக்சின் பி6 ஆகும். இவ்விற்றமின் ஆனது முக்கியமாக புரதத்திலிருந்து சக்தி உருவாகுதல் மற்றும் குருதியில் உள்ள சிவப்பு அணுக்களில் உற்பத்தி போன்றவற்றிற்கு முக்கிய பங்கு வகிக்கின்றது. அத்துடன், இன்சுலின் மற்றும் ஹீமோகுலோபின் உற்பத்தி போன்றவற்றிலும் பங்கு வகிக்கின்றது. இவ்விற்றமின் ஆனது அதிகளவில் இறைச்சி, தவிடுள்ள தானியங்கள், அவரை இன தானியங்கள், பச்சை இலை மரக்கறிகள் போன்றவற்றில் அதிகளவில் காணப்படுகின்றன. இவ்விற்றமின் குறைபாட்டினால் தோல் கோளாறுகள், அமீமியா, சிறுநீரகக் கற்கள் மற்றும் வயிற்று குமட்டல் போன்றவை ஏற்படும்.

**போலேட் பி9 folate (folic acid)**

அடுத்த விற்றமின் பி ஆனது போலேட் பி9 ஆகும். இவ்விற்றமினை முக்கியமாக குருதியில் சிவப்பணுக்களின் உற்பத்தி, புரதத்திலிருந்து சக்தி உற்பத்தி போன்றவற்றுக்கு உதவுகின்றது. இவ்விற்றமின் ஆனது அதிகளவில் கடுமையான பச்சை இலைவகைகள், இறைச்சி வகைகள், மீன், தவிடுள்ள தானியங்கள், ஈரல், புளிப்பான பழங்கள் போன்ற உணவுகளில் அதிகளவில் காணப்படுகின்றன.

அத்துடன் சிலவகையான தானியங்களில் மேலதிகமாக இவ்விற்றமின் ஆனது சேர்க்கப்படுகின்றது. இவ்விற்றமின் ஆனது கருப்பையில் உள்ள சிசுவின் முள்ளந்தண்டு உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றது. அத்துடன் வளர்ந்தவர்களுக்கு இதயநோய் சம்பந்தமான ஆபத்து ஏற்படுவதை குறைக்கின்றது. இவ்விற்றமின் குறைபாட்டினால் வளர்ச்சி மற்றும் புரத உற்பத்தி பாதிப்படைதல், ஒட்டுமொத்த வளர்ச்சி பாதிப்படைதல், அமீபியா, வயிற்றோட்டம் போன்றவை ஏற்படுகின்றன.

இவ்விற்றமின் கரு தரிக்க காத்திருப்பவர்கள், கர்ப்பிணிப் பெண்கள் மிகவும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் இக்காலத்தில் இவ்விற்றமின் குறைபாடு ஏற்படின் குழந்தைகளுக்கு முள்ளந்தண்டு சம்பந்தமான குறைபாடு ஏற்படுவதற்கு ஏதுவாக அமைகின்றது. எனவே இவ்விரு வகுப்பினரும் கட்டாயமாக போலிக் அசிட் ஆனது ளரிpடநஅநவெ (குறைநிரப்பு குளிகைகள்) மூலம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இவர்களுக்கு நாள் ஒன்றுக்கு தேவையான போலிக் அசிட் அளவானது கர்ப்பிணிப் பெண்களுக்கு 600மி.கி. அத்துடன் பெண்களுக்கு 400மி.கி. ஆகும். அத்துடன் போலிக் அசிட் அதிகளவு உள்ள உணவுகளையும் நாளாந்தம் சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

**தொடரும்**

**உரையாடல்: எஸ்.கோகிலா**

# பேராசிரியர் ஷானிக்கா ஹிரிம்புரேகம - பங்களாதேஷ் தூதுவர் கோண்ட்கர் தல்ஹாவுக்கும் இடையில் சந்திப்பு



பேராசிரியர் ஷானிக்கா ஹிரிம்புரேகம மற்றும் பங்களாதேஷ் தூதுவரும், யுனெஸ்கோவிற்கான நிரந்தரப் பிரதிநிதியுமான கோண்ட்கர் எம். தல்ஹா ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று அண்மையில் பரிஸிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் நடைபெற்றது.

வாணிபம் மற்றும் வர்த்தகம் தொடர்பான ஒத்துழைப்புக்கான பரஸ்பர நலன்சார்ந்த பகுதிகள் குறித்து இரண்டு தூதுவர்களும் கலந்துரையாடினர். மேலும், பங்களாதேஷிலுள்ள பல இலங்கை மாணவர்களுக்குக் கிடைக்கும் உயர்கல்வி வாய்ப்புகள் குறித்தும் இரண்டு தூதுவர்களும் கருத்துகளைப் பரிமாறிக்கொண்டனர்.

2021ஆம் ஆண்டு பங்களாதேஷுக்கு விஜயம் செய்திருந்த இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு வழங்கப்பட்ட அன்பான வரவேற்புக்காக தூதுவர் ஹிரிம்புரேகம பிரதமர் ஷேக் ஹசீனாவிற்கு நன்றிகளைத் தெரிவித்தார்.

பயனுள்ள கலந்துரையாடலை மேற்கொண்ட இரண்டு தூதுவர்களும் மாணவர் புலமைப்பரிசில்கள், ஆய்வு நிறுவனங்களுடனான ஒத்துழைப்பு மற்றும் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் வர்த்தகம் ஆகியவற்றில் சாத்தியமான ஒத்துழைப்புகள் குறித்தும் கலந்துரையாடினர்.

# பாடசாலைகளில் கொரோனா தடுப்பூசி விழிப்புணர்வு; கிளி. ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் ஆலோசனை





கொரோனா தடுப்பூசிகளை போடுதல் மற்றும் டெங்குப் பரவலை கட்டுப்படுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக பாடசாலை மட்டங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் (13) நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, சிலவகையான கொரோனா தடுப்பூசிகளை போட்டுக்கொள்வதால் மலட்டுத்தன்மை ஏற்படும், மரணம் ஏற்படும் போன்ற தவறான கருத்து சமூகத்தில் பரவி இருப்பதனால் பாடசாலை மாணவர்களுக்கு குறிப்பாக, மாணவிகளுக்கு தடுப்பூசிகளை ஏற்றுவதற்கு பெற்றோர் எதிர்ப்புத் தெரிவிப்பதாக சுட்டிக்கட்டிய கிளிநொச்சி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர், தடுப்பூசிகள் அனைத்தும் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் அங்கீகரிக்கப்பட்டவை என்பதால் பொதுமக்கள் எந்தவிதமான தயக்கமுமின்றி தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளவேண்டும் எனவும் தெரிவித்தார்.

அதேவேளை, டெங்கு நோய் பரவுவதற்கான ஏதுநிலைகள் காணப்படுவதுடன், இதுவரை கிளிநொச்சி மாவட்டத்தில் 39 டெங்கு நோயாளர்கள் அண்மைக்காலத்தில் அடையாளங்காணப்பட்டுள்ளதாக தெரிவித்த பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர், மக்களுக்கு உரிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்நிலையில் கருத்து தெரிவித்த ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கொரோனா தடுப்பூசிகளை முடிந்தளவு விரைவில் அனைவருக்கும் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்ததுடன், பாடசாலைகள் மூலம் மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை மேள்கொள்ளுமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதனிடையே, மக்களின் தேவைகளையும் பிரதேசத்தின் அபிவிருத்தியையும் முதன்மைப்படுத்தி வனப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ள காணிகளில் கணிசமானவற்றை எதிர்வரும் ஆறு மாத காலத்தில் விடுவித்துக்கொள்ள முடியும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வனப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களின் உயரதிகாரிகள் கடந்த வாரம் கிளிநொச்சி மாவட்டத்திற்கு வருகை தந்து, பல்வேறு காரணங்களுக்கு பயன்படுத்துவதற்காக விடுவிக்கப்படவேண்டிய காணிகளாக மாவட்ட செயலகத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசங்களை பார்வையிட்டதுடன், அவை தொடர்பான தமது கருத்துகளையும் தெரிவித்திருந்தனர்.

இதுதொடர்பாக இன்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையிலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்குறிப்பிட்ட விடயத்தினை தெரிவித்தார்.

புது வருடத்திற்கான முதலாவது கூட்டமான இ'ன்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு நிதி ஒதுக்கீடுகளையும் பயன்படுத்தி மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கான தீர்மானம் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மதுரங்குளியில் மருத்துவ நிலையம் திறந்துவைப்பு



(ரஸீன் ரஸ்மின்)

மதுரங்குளி, கணமூலையில் தாருஸ்ஸலாம் மருத்துவ நிலையம் (Dharussalam Medical Center) ஒன்று அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

கணமூலை தெற்கு கிராமசேவகர் பிரிவில் இயங்கிவரும் தாருஸ்ஸலாம் ஜனாஸா நலன்புரிச் சங்கம் மற்றும் கணமூலை பெரியபள்ளிவாசல் ஆகியவற்றின் அனுசரணையில் இந்த மருந்தகம் திறக்கப்பட்டுள்ளது.

கணமூலை தாருஸ்ஸலாம் ஜனாஸா நலன்புரிச் சங்கத்தின் தலைவர் எம்.எஸ்.எம்.முஸம்மில் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடமேல் மாகாண கூட்டுறவு வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் வன்னிநாயக்க ஜயபத்மா பிரதம அதிதியாக கலந்துகொண்டு குறித்த மருந்தகத்தை திறந்துவைத்தார்.

இதன்போது கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் பைசர் மரிக்கார், முந்தல் பிரதேச செயலாளர் விஜானி வசந்திகா, புத்தளம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.பீ.எஸ்.ஜயமகா, உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஈ.எம்.சன்ஜீவ மகநாம, கணமூலை பெரியபள்ளிவாசல் தலைவர் அஷ்ஷெய்க் எச்.எச்.எம்.நஜீம் உட்பட நிர்வாக சபை உறுப்பினர்கள், உலமாக்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், வர்த்தகர்கள், சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

கடந்த 2017ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கணமூலை தாருஸ்ஸலாம் ஜனாஸா நலன்புரிச் சங்கம் கல்வி, சுகாதாரம், வீடமைப்பு உள்ளிட்ட பல சமூக சேவைகளை முன்னெடுத்து வருவதாக கணமூலை தாருஸ்ஸலாம் ஜனாஸா நலன்புரிச் சங்கத்தின் தலைவர் எம்.எஸ்.எம்.முஸம்மில் தெரிவித்தார்.

அத்துடன் , ஒரு குறுகிய காலத்திற்குள் கிராம தனவந்தர்கள், பொதுமக்கள் ஆகியோரின் நிதியுதவியுடன் ஜனாஸா வாகனம் ஒன்றை கொள்வனவுசெய்து இலவசமாக ஜனாஸா சேவைகளையும் முன்னெடுத்து வருகிறது.

இந்நிலையிலேயே இந்தப் பகுதியிலுள்ள மக்களின் மருத்துவ தேவைகளை கவனத்திற்கொண்டு சேவை அடிப்படையில் நோயாளிகளுக்கு மருந்துகள் விநியோகிக்கப்படுகின்றன.

அத்துடன், நிபுணத்துவம் பெற்ற வைத்தியர்களைக்கொண்டு இந்த மருத்துவ நிலையம் நடத்தப்பட்டு வருவதுடன், இங்கு வருகை தரும் நோயாளிகளிடம் 250 ரூபா மாத்திரம் சேவைக் கட்டணமாக அறவிடப்பட்டு மருந்துகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

கணமூலை தெற்கு, கணமூலை வடக்கு, கடையாமோட்டை, நல்லாந்தளுவ, விருதோடை, சமீரகம, பெருக்குவற்றான் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இதன்மூலம் நன்மையடைந்து வருவதாகவும் கணமூலை தாருஸ்ஸலாம் ஜனாஸா நலன்புரிச் சங்கத்தின் தலைவர் எம்.எஸ்.எம்.முஸம்மில் மேலும் தெரிவித்தார்.

# புத்தளத்தில் விசேட தைப்பொங்கல் நிகழ்வுகள்









(ரஸீன் ரஸ்மின்)

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நிகழ்வுகள் புத்தளம் மாவட்டத்தில் நேற்று (14) வெகு விமர்சையாக இடம்பெற்றது.

அந்த வகையில் மாவட்டத்தின் புத்தளம், கற்பிட்டி, முந்தல், உடப்பு மற்றும் சிலாபம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள இந்து ஆலயங்களில் தைப் பொங்கலை முன்னிட்டு பொங்கலும் , விஷேட பூஜைகளும் இடம்பெற்றன.

இதேவேளை, பஞ்ச ஈஸ்வரங்களில் முதன்மை பெற்றதும் புத்தளம் மாவட்டத்தில் பிரசித்தி பெற்றதும் சக்தி பீடங்களில் ஒன்றுமான சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாதஸ்சுவாமி ஆலயத்தில் ஆலயத்தின் பிரதம குருவும் தர்மகத்தாவுமான பிரம்ம ஸ்ரீ எஸ்.பத்மநாபக் குருக்கள் தலைமையில் நேற்று காலை 6.00 மணியளவில் பொங்கல் பொங்கப்பட்டு காலை 8.00 மணிக்கு விஷேட பூஜை வழிப்பாடுகள் இடம்பெற்றன.

கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக ஆலய நிர்வாக சபையினர் உள்ளிட்ட குறைந்தளவிலான பக்தர்கள் இந்த பூஜை வழிபாடுகளில் கலந்துகொண்டனர்.அத்துடன், புத்தளத்தில் வாழும் தமிழ் மக்கள் தமது வீடுகளையும், வர்த்தக நிலையங்களையும் அலங்கரித்து, புத்தாடை அணிந்து பொங்கல் பொங்கி சூரியனுக்கும், இயற்கைக்கும் நன்றி செலுத்தியுள்ளனா'.

# புங்குடுதீவிலிருந்து மரங்களை கடத்திய சாரதி கைது

(யாழ் நிருபர்)



புங்குடுதீவு பகுதியிலிருந்து சட்டவிரோதமாக பனை மரங்கள் மற்றும் பெறுமதியான மரங்கள் என்பவற்றை பாரவூர்தியில் கடத்திச்சென்ற சாரதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மரக்கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட பாரவூர்தியையும், மரங்களையும் கையகப்படுத்தியுள்ள பொலிஸார் பாரவூர்தி சாரதியிடம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

புங்குடுதீவு, மடத்துவெளிப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில் நேற்று பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

நேற்று ஜே - 26 கிராமசேவையாளர் மற்றும் அப்பகுதியின் பொருளாதார உத்தியோகத்தர் ஆகியோரது உறுதிப்படுத்தலில் 45 சீவிய பனைமரத் துண்டுகளை எடுத்துச்செல்ல அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில், அதிகளவான மரங்களை பாரவூர்தியில் எடுத்துச்செல்ல முற்பட்ட வரையே பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இதேவேளை, பல மாதங்களாக கண்டியை சேர்ந்த நபரொருவர் புங்குடுதீவைச் சேர்ந்த அரசியல் பின்னணியைக்கொண்ட இருவருடன் இணைந்து சட்டவிரோதமாக பனைமரங்கள் உள்ளிட்ட மரங்களை வெட்டி கடத்தி வருவதாகவும், அவர்கள் ஊர்காவற்றுறை பொலிஸாருடன் நல்லுறவை பேணுவதனால், பொலிஸார் நடவடிக்கை எடுப்பதில்லை எனவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன் தினம் குறித்த நபர்கள் மரக்கடத்தலில் ஈடுபடுவதாக முன்னராக ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு அறிவித்த போதிலும், அவர்கள் நடவடிக்கை எடுக்காத நிலையில், பொலிஸ் உயர் அதிகாரியிடம் முறையிட்ட பின்னரே ஊர்காவற்றுறை பொலிஸார் நடவடிக்கை எடுத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

# டஷிஹூய் உச்சிமாநாட்டில் இலங்கை உற்பத்திகள், சுற்றுலாத்துறைக்கு ஊக்குவிப்பு






வர்த்தகம், கல்விப் பரிமாற்றங்கள் மற்றும் தொண்டு நோக்கங்களுக்காக 2021ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச வர்த்தக ஒத்துழைப்பு மற்றும் பொதுநலன் பற்றிய டஷிஹூய் உச்சிமாநாட்டின்போது இலங்கை உணவுப் பொருட்கள், தேயிலை, கைவினைப்பொருட்கள் மற்றும் சுற்றுலா ஆகியவற்றை குவாங்சூவில் உள்ள இலங்கையின் துணைத் தூதரகம் ஊக்குவித்தது.

வணிக சமூகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் மருத்துவ வல்லுநர்கள் இந்த மன்றத்தில் கலந்துகொண்டனர்.

மன்றத்தின் பங்கேற்பாளர்களை கூடத்திற்கு செல்லத் தூண்டும் வகையில், குவாங்சூ ஸ்ரீ ரோட் கனெக்ஷன் டிரேட் கம்பெனி லிமிடெட் உடன் இணைந்து, இந்தியா, மெக்சிக்கோ, ஈரான், மொரோக்கோ, உள்ளூர் மற்றும் சர்வதேச வணிக நிறுவனங்களுக்கு மத்தியில் இலங்கையை சிறந்த தலமாக இலங்கையின் துணைத் தூதரகத்தால் காட்சிப்படுத்த முடிந்தது.

இலங்கைக் கூடத்தினால் கவரப்பட்ட பல பார்வையாளர்கள் இலங்கையின் உற்பத்திகளைக் கொள்வனவுசெய்து, தொடர்புத் தகவல்களைப் பரிமாறிக்கொண்ட அதேவேளை, இலங்கைத் தயாரிப்புகளுக்கு உயர்தரமான கொள்வனவாளர்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளை அளித்தனர்.

வெளிக்களப் பயணக் கட்டுப்பாடுகள் சீனாவில் தளர்த்தப்படும்போது, ஒரு சுற்றுலாத் தலமாகக் கருதி பார்வையாளர்கள் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கான தமது ஆர்வத்தை வெளிப்படுத்தினர்.

# முல்லைத்தீவில் கத்தோலிக்க தேவாலயங்களிலும் தைப்பொங்கல் கொண்டாடிய மக்கள்!







(வன்னி நிருபா')

தமிழர் திருநாள் தைப்பொங்கல் நிகழ்வுகள் நேற்று (14) தமிழ் மக்களால் கொண்டாடப்பட்டுவரும் நிலையில், தமிழர் தாயகப் பகுதிகளிலும் தமிழ் மக்கள் பொங்கல் பொங்கி சூரியனுக்கும் இயற்கைக்கும் நன்றி செலுத்தினர் .

மக்களின் வீடுகள், வியாபார ஸ்தாபனங்கள், தொழில் நிலையங்கள், ஆலயங்களில் பானைகளில் பாலிட்டு பொங்கல் பொங்கி தைப்பொங்கல் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

நாட்டில் நாளுக்குநாள் அதிகரித்துவரும் விலைவாசி ஏற்றத்துக்கு மத்தியிலும் மக்கள் தமிழர் திருநாளை கொண்டாடினர்.

விசேடமாக கத்தோலிக்க தேவாலயங்களிலும் தமிழ் மக்கள் பொங்கல் பொங்கி இயற்கைக்கு நன்றி தெரிவித்தனர். முல்லைத்தீவு இராஜப்பர் தேவாலயம், முல்லைத்தீவு தீர்த்தகரை வேளாங்கண்ணி தேவாலயம் ஆகியவற்றில் தைப்பொங்கல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

முல்லைத்தீவில் வீதி ஓரங்களில் பொது இடங்களிலும் இராணுவத்தினர் பொங்கல் வாழ்த்து பதாகைகளை காட்சிப்படுத்தியிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.











மலையக மக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி சமய வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்து தைப்பொங்கல் பண்டிகையை நேற்று (14) கொண்டாடினார்கள். ஹட்டன் பகுதியில் ஹட்டன் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் பிரதான குருக்கள் பிரம்மஸ்ரீ பூர்ணசந்திரானந்த குருக்கள் தலைமையில் தைப்பொங்கல் விசேட சமய வழிபாடுகள் நடைபெற்றன. (படங்கள் - க.கிஷாந்தன்)

# நாடெங்கிலும் களைகட்டியது தைப்பொங்கல் கொண்டாட்டங்கள்!



தைத்திருநாளை முன்னிட்டு பதுளை மாவட்டத்தின் பல பகுதிகளில் விசேட பூஜை வழிபாடுகள் நேற்று பக்திபூர்வமாக முன்னெடுக்கப் பட்டன. இதன்போது பஜனை ஊர்வலமும் இடம்பெற்றது. (படங்கள்: நடராஜா மலர்வேந்தன்)



இரத்தினபுரி, காவத்தை பிரதேசத்தில் நேற்று தைப்பொங்கல் பூஜை நிகழ்வுகள் இடம்பெற்றன. மக்கள் தமது வீடுகளில் சூரிய பொங்கல் பொங்கி இறைவழிபாட்டில் ஈடுபட்டதை படங்களில் காணலாம். (படங்கள்: இரத்தினபுரி நிருபர்)



சப்ரகமுவ மாகாண சபையின் கீழ் இயங்கும் சப்ரகமுவ மாகாண சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவைகள் திணைக்களத்தினால் இம்முறை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொங்கல் விழா சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் நேற்று முன்தினம் (13) இரத்தினபுரி தேவாலகாவ பிரதேசத்தில் அமைந்துள்ள சிறுவர் வழிகாட்டல் நிலையத்தில் இடம்பெற்றது. (படங்கள்: சிவா ஸ்ரீதரராவ்)



யாழ்.குடாநாட்டில் நேற்று தைப்பொங்கல் நிகழ்வு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஆலயங்களில் அதிகாலை முதல் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றதுடன் வீடுகளிலும் சமய, சமூகப் பொது நிறுவனங்களிலும் இடம்பெற்ற பொங்கல் கொண்டாட்டங்களில் மக்கள் உற்சாகத்துடன் பங்கு பற்றினர். (படங்கள்: ஐ.சிவசாந்தன்)



தைப்பொங்கல் விழா வெள்ளவத்தை பொதுச் சந்தை முன்றலில் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. மேற்படி பொங்கல் நிகழ்வு ஜனநாயக மக்கள் முன்னணியின் உறுப்பினர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் மாணவன் பலி



(கம்பளை நிருபர்)

பேராதெனிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பேராதெனிய, தெல்தோட்டை பிரதான வீதி அல்லோயா பகுதியில் நேற்று முன்தினம் (13) இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தெல்தோட்டை பகுதியிலிருந்து வந்த தனியார் பஸ் பேராதெனிய பகுதியிலிருந்து சென்ற மோட்டார் சைக்கிளுடன் அல்லோயா பகுதியில் வைத்து மோதியுள்ளது.

பாடசாலை செல்லும் 19 வயது மாணவன் இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

பேராதெனிய வைத்தியசாலை அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகளை பேராதெனிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழில் இடம்பெற்ற சர்வதேச இந்து பௌத்த ஒற்றுமைக்கான அமைப்பின் பொங்கல் விழா



(யாழ். நிருபர் )

சர்வதேச இந்து பௌத்த ஒற்றுமைக்கான அமைப்பு மற்றும் யாழ். நண்பர்கள் அமைப்பும் இணைந்து நடத்திய பொங்கல் விழா நேற்று (14) யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

நேற்று காலை 10 மணியளவில் நல்லை ஆதீன மண்டபத்துக்கு முன்பாக இடம்பெற்ற பொங்கல் விழாவுக்கு விருந்தினர்கள் நல்லூர் ஆலயத்திற்கு முன்பாக இருந்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

இதன்போது பல்வேறு கலாசாரங்களை பிரதிபலிக்கும் வகையில் கண்டிய நடனம், பொய்க்கால் குதிரையாட்டம், மயிலாட்டம், நாதஸ்வர மேளதாளங்கள் முழங்க விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர்.

இந்நிகழ்வின் போது பொங்கல் பானையில் விருந்தினர்களால் அரிசி போடப்பட்டதுடன் மங்கள விளக்கேற்றல் நிகழ்வு பௌத்த பாரம்பரிய முறைப்படி கண்டிய மேள தாளங்கள் முழங்க நடைபெற்றது.

இதன்போது வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ரெஜினோல்ட் குரே, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, நாகவிகாரை விகாராதிபதி ஸ்ரீ விமல தேரர், நல்லை ஆதீன குருமுதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், மறவன்புலவு சச்சிதானந்தன், யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் மற்றும் மதத்தலைவர்கள், இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின்போது இராணுவம் மற்றும் பொலிஸாரால் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டு காணப்பட்டதுடன் நிகழ்வு மண்டபத்தின் பெரும்பாலான ஆசனங்கள் வெறுமையாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மன்னார் பொதுவைத்தியசாலை சந்தியில் கூலர் ரக வாகன விபத்து

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொது வைத்தியசாலை பிரதான வீதி பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு 11 மணியளவில் விபத்துச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது

மன்னார் பேசாலை பகுதியிலிருந்து மீன்களை ஏற்றிச்சென்ற கூலர் ரக வாகனமொன்று மேற்படி வைத்தியசாலை சந்தி சுற்றுவட்ட பகுதியிலுள்ள கடைகளில் மோதுண்டு கவிழ்ந்துள்ளது.

ஸ்ரேடியம் வீதி ஊடாக வைத்தியசாலை சந்தி நோக்கி பயணித்த குறித்த வாகனம் வைத்தியசாலை சுற்று வட்ட பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து அருகிலுள்ள கடைகளில் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

இவ்விபத்தில் வைத்தியசாலை பகுதியில் அமைக்கப்பட்டு நடத்தப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றின் விற்பனை நிலையம் முற்றாக சேதமாகியுள்ளதுடன், அருகில் இருந்த சில கடைகளும் சேதமடைந்துள்ளன.

குறித்த விபத்தில் சாரதி மற்றும் நடத்துனர் பலத்த காயங்களுடன் கிராம இளைஞர்களால் மீட்கப்பட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திருகோணமலை எண்ணெய்த்தாங்கிக்கு எதிராக வவுனியாவில் சுவரொட்டிகள்

(வவுனியா நிருபர்)

'திருகோணமலை எண்ணெய்த்தாங்கிகள் தேசிய




வளங்களை இந்தியாவிற்கு தாரைவார்க்கின்ற உடன்படிக்கையை சுருட்டிக்கொள்' என்ற வாசகத்தினை தாங்கிய சுவரொட்டிகள் வவுனியா நகரின் பல இடங்களில் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் ஒட்டப்பட்டுள்ள இச்சுவரொட்டியின் கீழ்ப்பகுதியில் மக்கள் விடுதலை முன்னணி என உரிமை கோரப்பட்டுள்ளது.

இச்சுவரொட்டிகள் கண்டி வீதி, நூலக வீதி, மன்னார் வீதி, ஹொரவப்பொத்தானை வீதி, புகையிரத நிலைய வீதி என வவுனியா நகரின் பல இடங்களில் ஒட்டப்பட்டுள்ளன.

## தொழிலதிபர் ஈ.எஸ்.பி. நாகரத்தினத்திற்கு கலாநிதி பட்டம்



(யாழ். நிருபர்)

தொழிலதிபர் கல்விக்காருண்யன் லயன் ஈ.எஸ்.பி.நாகரத்தினத்துக்கு கொழும்பு பல்கலைக்கழகத்தினால் மனிதநேயம் மற்றும் சமூகசேவைகளுக்காக கலாநிதி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

இக் கலாநிதி பட்டமானது, கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்வியியல் பீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் சந்திரசேகரத்தால் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காரைநகரை சொந்த இடமாகக்கொண்ட பிரபல தொழிலதிபர் கல்விகாருண்யன் லயன் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் வடபகுதியில் கல்வி, விளையாட்டுத்துறைக்கு தன்னாலான பல்வேறு சேவைகளை ஆற்றி வருவதோடு, இந்து ஆலயங்களுக்கும் தன்னாலான உதவிகளை வழங்கிவரும் நிலையில் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் கலாநிதி பட்டம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சேதன உள்ளீடுகளை ஊக்குவிக்கும் பசுமை விவசாய வீட்டுத் தோட்டம் யாழில் ஆரம்பம்



(யாழ். நிருபர்)

சேதன உள்ளீடுகளை ஊக்குவிக்கும் பசுமை விவசாய மாதிரி வீட்டுத் தோட்டம் நேற்று முன் தினம் வைபவ ரீதியாக யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி, பருத்தித்துறையில் இராணுவம் மற்றும் வடமராட்சி வலயக்கல்விப் பணி மனை இணைந்து இந்தத் திட்டத்தினை முன்னெடுத்துள்ளது.

நச்சுத்தன்மையற்ற உணவு மற்றும் ஆரோக்கியமான தேசத்தை உருவாக்கும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வீட்டுத் தோட்டத்தில் நச்சுத்தன்மையற்ற சேதனப் பசளையை பயன்படுத்துவதை ஊக்குவித்து பசுமை விவசாயத்தின் தேசிய கொள்கைக்கு ஆதரவளித்து இப் பசுமை வீட்டுத் தோட்டத்தின் மூலம் அனைத்து சமூகங்களுக்கிடையிலும் ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் க.சத்திதபாலன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், இராணுவத்தின் 55ஆவது படைப் பிரிவு தளபதி பிரிகேடியர் பிரசன்ன குணரத்தின, பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிறி, கரவெட்டி பிரதேச செயலர் ஈ.தயாபரன், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கு.பிரபாகரமூர்த்தி, வலயக்கல்விப் பணிமனை அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!



சேதன உரத்திட்டத்தால தமக்கு இருந்த அரசியல் வாழ்க்கையே நாசமாய் போய்த்தாம் எண்டு விவசாய அமைச்சர் மகிந்தானந்த சொல்லி ஒப்பாரி வைக்கிறாரு.. மறுகா ஒப்பாரிவைக்காம என்ன செய்யிற.. எங்கட போடிமாரு, உழவர்கள், விவசாயிகள் எல்லோரின் வாழ்வே நாசமாக்கினது அவரும் அவரிட மன்னரும்தானே...

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# பள்ளிவாசல்களில் கடமை புரிபவர்களின் ஊதியத்தை அதிகரிக்குமாறு கோரிக்கை

## விரைவில் தீர்வு தரப்படுமென்கிறார் பள்ளிவாசல்கள் சம்மேளனத் தலைவர் சபீஸ்

(நூருல் ஹுதா உமர்)

அக்கரைப்பற்றில் பல பள்ளிவாசல்களில் கடமைபுரிபவர்களின் சம்பளம் 15ஆயிரம் ரூபாவுக்கும் குறைவாக இருப்பதாக பலர் முறையிட்டுள்ளனர். இக்கோரிக்கைகள் நியாயமாக இருந்தாலும் அநேக பள்ளிவாசல்களின் வருமானம் போதாமையே இதற்கு காரணமாகவும் இருக்கின்றது. இதனை நிவர்த்தி செய்ய புதிய திட்டங்களை உருவாக்கியிருந்த வேளையில் சில தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. விரைவில் இக்குறைகள் நிவர்த்திக்கப்படும் என நம்புகின்றோம் என்று அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத் தலைவர் எஸ்.எம். சபீஸ் தெரிவித்தார்.



மன்புல் கைராத் அரபுக்கல்லூரியின் ஹிப்ழுல் குர்ஆன் தமாம் நிகழ்வு கல்லூரியின் அதிபர் ரியாஸ்தீன் ஹாபிஸ் (ஹக்கானி) தலைமையில் அக்கரைப்பற்று ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் நடைபெற்றது. இதில் 8 மாணவர்கள் குர்ஆனை மனனம் செய்து தமாம் செய்திருந்தனர். இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர்,

மேலும் எமது பள்ளிவாசல் வெளிப்புறத்தில் இப்பகுதியில் வசிக்கும் சிறுவர்களை விளையாடுமாறு வேண்டிக் கொண்டதற்கிணங்க, கடந்த ஒருவருடத்துக்கு மேல் அவர்கள் இங்கே விளையாடிக்கொண்டிருக்கின்றனர். அப்படி விளையாடும் மாணவர்கள் தவறான பாதையில் செல்வதை தவிர்த்துக்கொள்வதுடன் வீணான பழக்க வழக்கங்களிலிருந்தும் தங்களை பாதுகாத்து கொள்கின்றனர். இதனால் தூய்மையான எதிர்கால சந்ததிகளை நாம் வளர்த்தெடுக்க முடியும். அவ்வாறு விளையாடும்போது பள்ளிவாசலின் சொத்துகளுக்கு ஏதாவது சேதங்கள் ஏற்பட்டால் அதனை என்னிடம் தெரிவிக்குமாறும் அக்குழந்தைகளை நொந்துகொள்ள வேண்டாம் எனவும் இங்கு கடமை புரிபவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளோம் என மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அகில இலங்கை அரபுக் கல்லூரியின் தலைவர் அஷ்ரப் மௌலவி, விரிவுரையாளர் கலாநிதி ராசிக் மௌலவி, கலாநிதி சித்தீக் ஹாபிஸ், நீதவான்கள், பள்ளிவாசல்கள் மற்றும் மன்புல் கைராத் அரபுக் கல்லூரியின் நிர்வாகிகள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## மட்டு. - கொழும்பு பிரதான வீதியில் வாகன விபத்து; இருவர் காயம்



(கல்குடா நிருபர்)

மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியில் ஓட்டமாவடி நாவலடி பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வாகனம் ஒன்று தடம்புரண்டுள்ளதாக வாழைச்சேனை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (14) காலை வாழைச்சேனையில் இருந்து பொலன்னறுவை கதுருவெல பகுதியை நோக்கி பயணித்த எல்ப் ரக வாகனம் ஓட்டமாவடி நாவலடி பிரதேசத்தில் வீதியை குறுக்கறுத்த யானையை கண்ட தடுமாற்றத்தில் இவ் விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாகனத்தில் பயணித்த பொலன்னறுவை – கதுறுவெல முஸ்லிம் கொலனி பிரதேசத்தைச் சேர்ந்த 23 மற்றும் 33 வயதுடைய நபர்கள் காயமடைந்து வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அம்பாறையில் எளிமையாக கொண்டாடப்பட்ட தைப்பொங்கல்





(பாறுக் ஷிஹான்)

பொங்கல் தினத்தை முன்னிட்டு பொதுமக்கள் அம்பாறை மாவட்டத்தில் எளிமையான முறையில் கொண்டாடியதை காணக்கூடியதாக இருந்தது.

நாட்டில் ஏற்பட்ட கொரோனா அசாதாரண சூழ்நிலை காரணமாக கடந்த காலங்களில் வீடுகளில் இருந்து பொங்கல் தினத்தை கொண்டாடியிருந்த நிலையில் இவ்வருடம் மிகவும் ஆர்வத்துடன் பொருட்கொள்வனவில் ஈடுபட்டிருந்தனர்.

எனினும் தற்பொழுது பொருட்களின் விலையேற்றம் ஏனைய பிற காரணங்களால் பொதுமக்கள் கோவிலுக்கு சென்ற பின்னர் தத்தமது வீடுகள், வர்த்தக நிலையங்களில் சம்பிரதாய பூர்வமாக பொங்கல் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மாநகர் உள்ளிட்ட பகுதிகளில் பொதுமக்கள் இவ்வாறு எளிமையாக பொங்கல் தினத்தை கொண்டாடி வருகின்றனர்.

மேலும் குறித்த பொங்கல் கொண்டாட்டமானது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக விலைவாசிகள் பெரிதும் அதிகரித்துள்ளதாகவும் பொதுமக்கள் கவலை தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மழை ஓய்ந்துள்ளபோதிலும் வெள்ளநீர் பாடசாலைகளில் தேங்கி நிற்பதால் சிரமம்







(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்து வந்த வடகீழ் பருவப் பெயர்ச்சி மழை தற்போது ஓய்ந்துள்ளபோதிலும் பாடசாலைகள் மற்றும் மக்கள் குடியிருப்புகள் உள்ளிட்ட பல இடங்களில் மழைவெள்ளம் தேங்கி நிற்பதனால் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், மக்கள் எதிர்கொள்ளும் இன்னல்களை நேரில் அவதானித்த மண்முனை தென்எருவில் பற்று பிரதேச சபை உறுப்பினர் மேகசுந்தரம் வினோராஜ் தனது சொந்த செலவில் நேற்று முன்தினம் (13) கொங்கிறீட் வீதியை உடைத்து தேங்கியுள்ள வெள்ளநீரை வெளியேற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்தின் களுவாஞ்சிக்குடி கிராமத்தில் அமைந்துள்ள சரஸ்வதி வித்தியாலயம் தற்போதும்கூட வெள்ள நீரில் அகப்பட்டுள்ளதனால் அங்கு கற்பிக்கும், ஆசிரியர்களும், கல்வி கற்கும் மாணவர்களும் மிகுந்த அசௌகரியங்களுக்குட்பட்டு வருவதாகவும், இதனால் தமது பிள்ளைகள் தொற்று நோய்க்குட்படும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், கிராமத்திலுள்ள மக்கள் குடியிருப்புகளில் தேங்கி நிற்கும் மழைவெள்ளம் வழிந்தோட வழியின்மையால் மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

வெள்ளநீர் வழிந்தோட முடியாத வகையில் கொங்கிறீட் வீதிகள் இடப்பட்டுள்ளதனால் வெள்ள நீர் தேங்கியுள்ளதாகவும், இதன் காரணமாக கொங்கிறீட் வீதியை உடைத்து வெள்ள நீரை வெளியேற்றுவதாகவும், இதன்போது மண்முனை தென் எருவில்பற்று களுவாஞ்சிகுடி வட்டார உறுப்பினர் வினோராஜ் தெரிவித்தார்.

# ஓட்டமாவடியில் ஒவ்வொரு விலையில் விற்கப்படும் மாட்டிறைச்சியால் குழப்பம்

## பிரதேச சபை தலையிட்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமாறு நுகர்வோர் கோரிக்கை

(மீராவோடை நிருபர்)



ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் இயங்கி வரும் மாட்டிறைச்சிக் கடைகளில் திடீரென விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதால் நுகர்வோர் அதிருப்தி அடைந்துள்ளனர்.


ஓட்டமாவடி பிரதேச சபை மாட்டிறைச்சியை விற்பனைசெய்ய கட்டுப்பாட்டு விலை நிர்ணயித்துள்ள நிலையில், குறித்த பகுதியிலுள்ள சில மாட்டிறைச்சிக் கடை உரிமையாளர்கள் விலைகளை அதிகரித்து விற்பனைசெய்வதாக நுகர்வோர் குற்றம் சுமத்துகின்றனர்.

குறித்த பகுதியில் ஒரு கிலோ மாட்டிறைச்சியின் விலை 1000, 1100, 1200 ஆகிய குழப்பமான விலைகளில் விற்பனை செய்யப்படுகிறது.

எனவே, இது தொடர்பாக ஓட்டமாவடி பிரதேச சபை உடனடியாக தலையீடு செய்து விலையினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும் என்று நுகர்வோர்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

## தைப்பொங்கல் தினத்தில் விசேட பூஜை வழிபாடுகள்

### திருமலையில் கொண்டாட்டம்



(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் தைப்பொங்கல் தினத்தினை முன்னிட்டு விசேட பூஜை வழிபாடுகள் திருகோணமலை காளிகோவிலில் நடைபெற்றது.

காளி கோவில் தேவஸ்தான இரவிச்சந்திர குருக்களினால் விசேட பூஜைகள் நடத்தப்பட்டன.

சுகாதார அறிவுறுத்தல்களுக்கமைய பூஜை வழிபாடுகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தின் 125ஆவது நினைவுதினம்



(ரவ்பீக் பாயிஸ்)

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தினை நினைவு கூறும் வகையில் 125 ஆவது நினைவுதினம் நேற்று முன்தினம் (13) திருகோணமலையில் நினைவுகூரப்பட்டது.

1893ஆம் ஆண்டு சுவாமி விவேகானந்தா அவர்கள் இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொண்டு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் சாவகச்சேரி வரை சென்ற பயணமானது வரலாற்று சிறப்புமிக்க இலங்கை விஜயமாக ஆண்டாண்டு காலம் நினைவு கூர்ந்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் (13) அந்த விஜயத்தின் 125ஆவது வருட நினைவினையொட்டி திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் அதிபர் பத்மசீலனின் தலைமையில் திருகோணமலை சண்முகா மகளிர் கல்லூரியில் இருந்து நடைபவனியாக திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரி வரை சென்று ஓர் ஆண்டு விழா முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வினை கல்லூரிகளின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள், இந்து மன்றம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பழையமாணவர் சங்கத்தினர் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்நிகழ்வில் ஆன்மிக அதிதியாக மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷஜானந்தஜீ மஹாராஜ், பிரதம அதிதியாக இந்தியாவின் கோயம்புத்தூர் ராமகிருஷ்ணா மிஷன் ஸ்ரீமத் சுவாமி ஹரிவ்ரதானந்தஜீ மஹாராஜ், விசேட அதிதிகளாக திருகோணமலை வலயக் கல்வி அலுவலகத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் சி.சிறிதரன், கிழக்கு மாகாண தொற்றுநோயியல் நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.அருட்குமார் ஆகியோர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாண ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் கல்விக் கண்காட்சி





(கல்லடி நிருபர்)

கிழக்கு மாகாண ஆரம்பக்கல்வி ஆசிரியர்களினால் தயாரிக்கப்பட்ட கற்றல் கற்பித்தல் உபகரணங்களைக் காட்சிப்படுத்தலும், இது தொடர்பான போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கலும் மற்றும் வீட்டை அடிப்படையாகக் கொண்ட கற்றல் கையேடு உத்தியோகபூர்வமாக வலயங்களுக்குக் கையளிக்கும் நிகழ்வும் கடந்த புதன்கிழமை (12) மட்டக்களப்பு பிள்ளையாரடியில் அமைந்துள்ள ஆசிரியர் வாண்மை நிலையத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வானது கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகத்தின் வழிகாட்டலின் கீழ் கிழக்கு மாகாண ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் தி.பார்த்தீபனின் ஒழுங்கமைப்பில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இலங்கைக்கான யுனிசெவ் வதிவிடப் பிரதிநிதி கிறிஸ்டியன் ஸ்கூக் வைபவ ரீதியாகக் கண்காட்சியைத் திறந்து வைத்தார். இவருடன் யுனிசெவ் பிரதிநிதிகளான லூசி மொரீரா டானியல்ஸ், றிபென்ஸியா பற்றர்சன், நிபால் அலாவுதீன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் கற்றல் கற்பித்தல் உபகரணங்களைத் தயாரிக்கும் போட்டியில் பங்கேற்று வெற்றிபெற்ற ஆசிரியர்களுக்கான நினைவுச் சின்னங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. அத்தோடு வீட்டை அடிப்படையாகக் கொண்ட கற்றல் கையேடு உத்தியோகபூர்வமாக கிழக்கு மாகாணத்திலுள்ள வலயங்களுக்குக் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வுக்கு தொழில்நுட்பம் மற்றும் நிதியனுசரணையாளராக யுனிசெப் நிறுவனம் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# குண்டு எறிதல் போட்டியில் முதலிடம்; சாதனை படைத்த மாணவிக்கு பாராட்டு

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டு. நாவற்காடு கிராமத்தினைச் சேர்ந்த ம.மமே.நாவற்காடு நாமகள் தேசிய பாடசாலையில் உயர்தரத்தில் கற்கின்ற மாணவி சுரேஸ் மயூரா கிழக்கு மாகாண மட்டத்தில் குண்டு எறிதலில் முதலாம் இடமும், பரிதி வட்டம் வீசுதலில் மூன்றாம் இடத்தினையும் பெற்று, இளைஞர் கழக ரீதியில் தேசிய மட்டத்தில் நான்காம் இடத்தினைப் பெற்று பாடசாலைக்கும், கிராமத்திற்கும், பிரதேசத்திற்கும் புகழை பெற்றுக்கொடுத்துள்ளார்.



இந்த சாதனையை நிலைநாட்டிய மாணவி சுரேஸ் மயூரா மற்றும் அவரை நெறிப்படுத்திய உடற்கல்வி ஆசிரியர் சுபாஸ், பயிற்றுவிப்பாளர், அக்னிச் சிறகுகள் பேரவையின் ஆரம்பகால உறுப்பினர் ச.விஜேந்திரன் நிதி அனுசரணையில் நேற்று முன்தினம் (13) ம.மமே.நாவற்காடு நாமகள் வித்தியாலயத்தில் அக்னிச் சிறகுகள் பேரவையால் பாராட்டி வாழ்த்தி பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வு பாடசாலையின் முதல்வர் இ.தியாகரெத்தினம், உப அதிபர், க.திருச்செல்வம், ஆசிரியர்கள், மாணவர்கள் முன்னிலையில் அக்னிச் சிறகுகள் பேரவை தலைமை ஒருங்கிணைப்பாளர் ஜெயக்கொடி, ஆலோசகர் மு.ரெத்தினதுரை ஆகியோரால் வழங்கி வைக்கப்பட்டன.

# திருமலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கு வழங்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம்








(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை சீனக்குடா எண்ணெய்க் குதங்களை இந்தியாவிற்கு விற்பனைசெய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து திருகோணமலையில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை பிரதான பஸ் தரிப்பு நிலையத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் (13) வியாழக்கிழமை தேசிய உடைமைகள் விற்பதற்கு எதிரான பெற்றோலியம் துறைமுகம், மின்சாரம் ஒன்றிணைந்த கூட்டணியினரினால் குறித்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் எங்களுடைய எண்ணெய்க்குதங்களை இந்தியாவிற்கு விற்காதே, எண்ணெய்த்தாங்கிகள், துறைமுகங்கள் மின்சாரம் முதலான தேசத்தின் சொத்துகளை விற்றுத் தீர்க்கும் அரசாங்கத்தை துரத்துவோம், அரசாங்கமே தேசத்தின் சொத்துகளை விற்று திண்ணாதே என்ற சுலோகங்களை ஏந்தியவாறும் எதிர்க்கட்சியில் இருக்கும்போது எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில இவ்வாறு தேசிய சொத்துகளை விற்பனைசெய்வதற்கு தனது எதிர்ப்பினை தெரிவித்துவிட்டு தற்போது ஆட்சியில் இருக்கும்போது இவ்வாறு நடந்துகொள்வது முறையற்ற செயல் எனவும் இதன்போது கூச்சலிட்டு தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தனர்.

இவ்வாறு இடம்பெற்ற குறித்த ஆர்ப்பாட்டத்தில் தேசிய பிக்குகள் முன்னணியின் தேரர்களும்





கலந்துகொண்டதுடன், குறித்த ஆர்ப்பாட்டத்தில் திருகோணமலை சீனக்குடா எண்ணெய்க் குதங்களை விற்பனைசெய்வதை எதிர்த்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் உள்ளிட்ட பொதுமக்களிடம் கையொப்பமும் சேகரிக்கப் பட்டதுடன், இவ்வாறு விற்பனைசெய்யப்பட்ட எண்ணெய்க்குதங்கள் தொடர்பில் இரண்டு வழக்குகள் நிலுவையில் இருக்கும்போது இவ்வாறு இரகசியமான முறையில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டமை தேசிய பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக்கும் - என தேசிய பிக்குகள் முன்னணியின் பொதுச் செயலாளர் வாகமுல்ல உதித்த தேரர் தெரிவித்ததுடன், தமது எதிர்ப்பினை தெரிவிப்பதாக இதன்போது கருத்து தெரிவித்திருந்தார்.

பிரதான பஸ் நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆர்ப்பாட்டக் காரர்கள் எண்ணெய்க்குதங்கள் அமைந்திருக்கின்ற சீனக்குடா ஐ.ஓ.சி. நிறுவன வளாகத்தின் CV 2ஆவது வாயில் முற்றுகையிடப்பட்டது.

எவ்வாறாயினும் இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்தின் பாதுகாப்பின்கீழ் அமைந்துள்ள எண்ணெய்க்குதங்களை பார்வையிடுவதற்கு குறித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அனுமதிக்கப்படாமயினால் அதிகாரிகளுக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் சற்று முருகல் நிலை ஏற்பட்டதையடுத்து பொலிஸார் மற்றும் ஐஓசி நிறுவனத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வரவழைக்கப்பட்டு பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் எண்ணெய்க்குதங்களை பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இதன்போது எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்ததாக திருகோணமலை எண்ணெய்க் குத வளாகங்களின் 50 வீத பங்குகள் இலங்கை வசம் உள்ளதாகவும் அப்பிரதேசத்தில் இலங்கை தேசிய கொடியை பறக்கவிடப்பட்டுள்ளதாகவும் பத்திரிகைகள், தொலைக்காட்சி மூலமாக அறியக் கிடைத்ததாக தேசிய பிக்குகள் முன்னணியின் பொதுச் செயலாளர் வாகமுல்ல உதித்த தேரர் தெரிவித்தார்.

இருப்பினும், அவ்வாறு எந்தவொரு நடவடிக்கையும் இந்த எண்ணெய்க்குதங்கள் அமைந்திருக்கின்ற வளாகங்களில் மேற்கொள்ளப் படவில்லை எனவும் இலங்கையின் தேசியக் கொடி ஏற்றப்படவில்லை எனவும் எந்தவொரு கணிப்பீடும் செய்யாமல் இரவோடு இரவாக ஒப்பந்தம் செய்யப்பட்ட இந்த எண்ணெய்க் குதங்கள் குத்தகைக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்தினை ஒப்பந்தம்செய்து நாட்டு மக்களை ஏமாற்றி நாட்டின் தேசிய சொத்துகளை வெளிநாடுகளுக்கு விற்பனைசெய்து குளிர் காய்வது வேதனையளிக்கிறது என தேசிய பிக்குகள் முன்னணியின் பொதுச் செயலாளர் வாகமுல்ல உதித்த தேரர் இதன்போது தெரிவித்தார்.

மேலும் வருகைதந்த ஆர்ப்பாட்டக்காரர்களினால் 75ஆவது எண்ணெய்க்குதம் என அடையாளம் இடப்பட்ட எண்ணெய்க்குதத்தினை பார்வையிட்டதோடு, நாட்டின் புதையல் இவ்வாறு நாசம் அடைந்திருப்பதினை பார்க்கும்போது கவலையடைவதாகவும் இத்தனை ஆண்டு காலமாக இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்தின் வசமிருந்த இந்த எண்ணெய்க்குதங்களின் பாகங்கள் கொள்ளையிடப்பட்டிருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் குத்தகைக்கு வழங்கப்பட்ட சொத்கள் உரியமுறையில் பராமரிக்கப்படாமல் இவ்வாறு தேசிய சொத்துகள் சீரழிவதற்கு அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும் எனவும் தேசிய பிக்குகள் முன்னணியின் பொதுச் செயலாளர் வாகமுல்ல உதித்த தேரர் இதன்போது தெரிவித்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் தேசிய பிக்குகள் முன்னணி, இலங்கை துறைமுக அதிகாரசபை, மின்சார சபை ஊழியர்கள் மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆதரவாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

## திருமலை வாகன விபத்தில் வயோதிபர் உயிரிழப்பு

(பதுர்தீன் சியானா)

திருகோணமலை - கிண்ணியா தள வைத்தியசாலைக்கு முன்னால் இடம்பெற்ற வாகன விபத்தில் வயோதிபரொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து நேற்று முன்தினம் (13) பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையான கிண்ணியா - ஆலிம் வீதியைச் சேர்ந்த அலியார் (65 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது;

கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் கொரோனா தடுப்பூசி ஏற்றுவதற்காக சென்று மீண்டும் தடுப்பூசியை ஏற்றிவிட்டு வீட்டுக்கு செல்வதற்காக வந்துகொண்டிருந்தபோது கிண்ணியா தள வைத்தியசாலைக்கு முன்னால் நடந்து சென்றுகொண்டிருந்த வேளையில் கிண்ணியாவில் பிரபல சட்டத்தரணியொருவர் காரில் மோதியதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து குறித்த வயோதிபர் படுகாயமடைந்த நிலையில் கிண்ணியா தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதையடுத்து மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டுசென்றபோது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகவும் வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, உயிரிழந்த வயோதிபருடன் பயணித்த 24 வயதுடைய மற்றுமொருவர் படுகாயமடைந்த நிலையில் கிண்ணியா தள வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பில் கிண்ணியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன், விபத்துக்குள்ளான காரின் சாரதியான பிரபல சட்டத்தரணி கிண்ணியா தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருவதாகவும் தெரியவருகின்றது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## செங்கலடிப் பகுதியில் கேரள கஞ்சாவுடன் இருவர் கைது!

(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செங்கலடி பகுதியில் கேரளா கஞ்சாவுடன் இருவர் கடந்த புதன்கிழமை (12) இரவு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

செங்கலடி இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின்படி 34 மற்றும் 39 வயதுடைய களுதாவளை மற்றும் களுவன்கேணிப் பிரதேசங்களைச் சேர்ந்தோரே இவ்விதம் கைதாகினர்.

செங்கலடி பொதுச் சந்தைக் கட்டடத்தில் நேற்று முன்தினம் இரவு இரகசியமான முறையில் சுமார் 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 01 கிலோ கஞ்சா பொதியினை விற்பனைசெய்ய முயன்றவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களைச் சுற்றிவளைத்த செங்கலடி இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் விசேட அதிரடிப் படையினரிடம் இவர்களை ஒப்படைத்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பாடசாலை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் பிரதித் தலைவராக மருதமுனை நியாஸ் தெரிவு

(பெரியநீலாவணை நிருபர்)



இலங்கை பாடசாலை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் பிரதித் தலைவராக மருதமுனையைச் சேர்ந்த கமு/புலவர்மணி சரிபுத்தீன் மகா வித்தியாலய அதிபர் எம்.எம்.முகம்மட் நியாஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கல்வி அமைச்சில் கடந்த புதன்கிழமை (12) நடைபெற்ற பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனத்தின் இந்த ஆண்டிற்கான (2022) நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. இத்தெரிவில் இறுதியாக நடைபெற்ற வாக்கெடுப்பில் கூடுதலான வாக்குகளை பெற்று உப தலைவராக இவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டத்தின் மருதமுனை பிரதேசத்தைச் சேர்ந்த எம்.எம்.முஹம்மட் நியாஸ் 1967ஆம் ஆண்டு பிறந்தவராவார். தனது ஆரம்பக் கல்வியை மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்திலும் பின்னர் உயர் கல்வியை மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியிலும் பெற்றுக்கொண்ட இவர், 1990ஆம் ஆண்டு ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்று அல்-மனார் மத்திய கல்லூரியில் தனது கற்பித்தல் சேவையை ஆரம்பித்தார்.

2012ஆம் அண்டு அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த இவர் மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை), ஷம்ஸ் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) ஆகியவற்றில் பிரதி அதிபராக கடமையாற்றினார். 2014ஆம் ஆண்டு பெரியநீலாவணை புலவர்மணி ஷரிபுத்தீன் மகா வித்தியாலயத்தில் பொறுப்பதிபராக கடமையைப் பொறுப்பேற்றார்.

இவரது காலத்தில் பாடசாலை கல்வி நடவடிக்கைகளில் பல சாதனைகளைப் பெற்றுக்கொண்டதுடன், பல்வேறு வளர்ச்சிப் படிகளையும் தொட்டதெனலாம். கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டிற்கப்பால் விளையாட்டு, கலை, இலக்கியம் என்று இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் படசாலை பல முன்னேற்றங்களைப் பெற்றுள்ளன.

அதிபர் எம்.எம்.நியாஸ் இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனத்திற்கு பிரதித் தலைவராக தெரிவுசெய்யப்பட்டமைக்கு பாடசாலை சமூகம் மற்றும் பிரதேச நலன்விரும்பிகள் தமது பாராட்டுகளை தெரிவித்துள்ளனர்.

## திருமலை மாவட்ட அரசாங்க அதிபரின் தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தி



(ரவ்பீக் பாயிஸ்)

மலர்ந்திருக்கும் தைத்திருநாளில் அனைவர் வாழ்வும் சீரும் சிறப்புமாக அமைய வேண்டுவதாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள தமது தைப்பொங்கல் வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் நாளாக தைப்பொங்கல் காணப்படுகின்றது. தை பிறந்தால் வழி பிறக்கும் என்பதுபோல் நாம் அனைவரும் எதிர்நோக்கியுள்ள கொவிட் வைரஸிலிருந்து பாதுகாப்பு பெற்று சவால்களை முறியடித்து தொழில்துறைகளை சிறப்பாக முன்னெடுக்க வழிபிறக்கும் என நம்புவதாகவும் அர்ப்பணிப்பு மற்றும் விடாமுயற்சியுடன் செயற்பட திடசங்கற்பம் பூணுவோம் எனவும் தமது வாழ்த்துச்செய்தியில் அரசாங்க அதிபர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## சோபை இழந்த தைப்பொங்கல் வியாபாரம்









(மட்டக்களப்பு நிருபர்)

தைப்பொங்கல் பண்டிகையை இந்துக்கள் வெள்ளிக்கிழமை (14) கொண்டாடிய இந்நிலையில் பல பாகங்களிலும் தைப்பொங்கல் வியாபாரங்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது.

அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி நகர்ப்பகுதியில் இவ்வருட தைப்பொங்கல் வியாபாரம் பெரிதும் களை கட்டியிருக்கவில்லை என வர்த்தகர்களும், பொதுமக்களும் கவலை தெரிவிக்கின்றனர். பொங்கல் பொருட்கள் தொடக்கம் மலிகைப் பொருட்கள் மற்றும் ஆடைகள் வரைக்கும் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதனால் மக்கள் பொருட்கள் வாங்குவதில் அதிகளவு நாட்டம் செலுத்துவது குறைந்திருப்பதாகவும், எனினும், தமது குழந்தைகளுக்கும், முதியவர்களுக்குமாவது புத்தாடைகளைக் கொள்வனவுசெய்வதற்காக தங்களிடமிருந்த சிறிய சிறிய தங்க ஆபரணங்களை நகைக்கடைகளிலும் மற்றும் வங்கிகளிலும், அடகுவைத்துவிட்டு குறைந்தளவான பொருட்களை மக்கள் இவ்வருடம் ஆங்காங்கே கொள்வனவு செய்துவருவதாகவும், வர்த்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

முன்னெப்போதும் இல்லாத வகையில் இவ்வருட தைப்பொங்கலை முன்னிட்டு தமது முச்சக்கரவண்டிகளை வாடகைக்கு அமர்த்துபவர்கள் மிகவும் வெகுவாக குறைந்துள்ளதாக களுவாஞ்சிக்குடி முச்சக்கரவண்டி ஓட்டுனர்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும், சந்தையில் அனைத்துப் பொருட் களுக்கும் அதிக விலை நிலவுவதனால் மக்கள் தமக்குத் தேவையான பொருட்களை ஆங்காங்கே கொள்வனவுசெய்து வருவதையும், கடந்த வருடங்களைப் போலல்லாமல் களுவாஞ்சிக்குடி நகரில் இம்முறை குறைந்தளவிலான மக்கள் கூட்டத்தையே அவதானிக்க முடிந்துள்ளது.

## திருமலையில் ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐந்து கிராம் ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த நபர் ஒருவரை இம்மாதம் 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் ரஸாக் பயாஸ் நேற்று முன்தினம் (13) உத்தரவிட்டார்.

திருகோணமலை பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் ஹெரோயின் போதைப்பொருளை விற்பனைசெய்து வருவதாக திருகோணமலை போதைப்பொருள் குற்றத்தடுப்புப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் ஐந்து கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைதுசெய்து திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சந்தேகநபர் ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்தமை, விற்பனைசெய்தமை போன்ற குற்றச்செயல்களில் ஈடுபட்டுள்ளதாக ஐந்து தடவைக்கு மேல் சிறைச்சாலைக்கு சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# I-Panel, இலங்கையின் நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த உட்கூரை சட்டங்களின் உற்பத்தியாளர்





இலங்கையின் புகழ்பெற்ற உட்கூரை சட்டங்களான I-Panel தமது நிலையான ஆய்வுகள் மற்றும் மேம்பாட்டின் மூலம் அதன் நிலைத்தன்மை இலக்குகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த நடைமுறைகளை மேம்படுத்துவதற்கான உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியுள்ளது. I-Panel நிறுவனத்தின் பரந்த மற்றும் பிரத்தியேகமான தயாரிப்புகள் போட்டித்தன்மைக்கமைய விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதுடன், அவை உங்கள் வதிவிடத்தின் எந்தப் பகுதிக்கும் பொருந்தக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இத்தயாரிப்புகள் உங்கள் வீடு, அலுவலகம் அல்லது கடைக்கான சிறந்த உள்ளக வடிவமைப்பு தீர்வாக அமையும்.

உள்நாட்டில் இடம்பெற்றுவரும் காடழிப்புக்கு சரியான நேரத்தில் பதிலளிக்கும் வகையில், தேக்கு, கித்துல், மஹோகனி, நெடுன் மரம் ஆகியவை உட்பட பல்வேறு வடிவங்களில் கவர்ச்சிகரமாக வடிவமைக்கப்பட்ட தயாரிப்புகள் மூலம் I-Panel நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த தயாரிப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்தயாரிப்புகள் மூலம் IDEA குழுமம் இலங்கை சந்தையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. I-Panel 50 மில்லியன் சதுர அடி உட்கூரை சட்டங்களை இன்றுவரை தயாரித்துள்ளது. இத்தயாரிப்புகளால் உட்கூரை சட்டங்களின் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் ஆயிரக்கணக்கான மரங்கள் இன்னமும் தொடர்ந்து வாழ்ந்துகொண்டேயிருக்கின்றமை இதிலுள்ள விசேட அம்சமாகும். இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் இந்நிறுவனம் சமூகத்திற்கு ஒரு முன்மாதிரியாக இருக்க முயல்கின்றது.

பெரும்பாலான உட்கூரை தயாரிப்புகளுடன் ஒப்பிடுகையில், I-Panel உட்கூரை மற்றும் சுவர் சட்டங்களின் பெறுமதி அண்ணளவாக 25% குறைவாக இருப்பதோடு, இவை முற்றுமுழுதாக உள்நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றன. வளர்ந்து வரும் சந்தை தேவை மற்றும் இறக்குமதிக்கான தேவையின் விளைவாக நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட நிதியைத் தக்கவைத்து, இலங்கை ரூபாவை ஸ்திரப்படுத்துவதில் I-Panel குழு குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கிறது. இந்த நிறுவனம் 5,000 குடும்பங்களுக்கு நேரடியாக மற்றும் மறைமுகமாக வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி அவர்களின் நிதி நிலைத்தன்மை மற்றும் பாதுகாப்பை உறுதிசெய்வதன் மூலம் நாட்டின் பொருளாதார நிலையையும் உயர்த்துகிறது.

IDEA அதன் பொருளாதார பங்களிப்பிற்கு மேலதிகமாக நிலைத்தன்மை மற்றும் சுற்றுச்சூழல் தாக்கம் ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. குறிப்பாக, UPVC கழிவு மீள்சுழற்சி செயல்முறையானது நிறுவனத்தின் தொழிற்சாலை வளாகத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் அதற்கும் அப்பால் 'I-Panel Store' மற்றும் அங்கீகரிக்கப்பட்ட 'I-Panel Sivilima' கிளை வலையமைப்புகளிலும் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**மேலும் விபரங்களுக்கு**
**தொடர்புகளுக்கு: 07 2200 2200**
**இணையதளம்: ipanel.lk sivilima.lk**
**ideagroup.lk**

தமிழன் வணிக உலகம் Business world www.thamilan.lk

# பிளாஸ்ரிக் கழிவுகளிலிருந்து மீள்சுழற்சியை வலுப்படுத்துவது இலங்கைக்கு பெறுமதியை சேர்க்க உதவும்





**சரோஜனி ஜயசேகர**

பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக்குகளை பொறுப்பற்ற முறையில் அகற்றுவது நாட்டிற்கு தீராத பிரச்சினையாக உள்ளது. நாட்டின் நகர்ப்புற திடக்கழிவுகளில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் 5.9 வீதத்துக்கும் அதிகமானவை என்று புள்ளிவிபரம் காட்டுகிறது. இது தினசரி 4,00,000 கிலோவைத் தாண்டுகிறது. நாட்டின் இயற்கைச் சொத்துகள் எவ்வளவு இன்றியமையாதவை என்பதைக் கருத்திற்கொண்டு, நமது சுற்றுச்சூழல் மற்றும் பிளாஸ்ரிக் கழிவு நிர்வகிப்பு நடைமுறைகளை மேம்படுத்த நாம் பாடுபட வேண்டும் என்பது தெளிவாகத் தெரிகிறது.

மிக முக்கியமாக பிளாஸ்ரிக் கழிவு நிர்வகிப்பிற்கான தேசிய செயல்திட்டம் 2021-2030 என்ற தேசியக் கொள்கையை முன்வைத்து, பிளாஸ்ரிக் கழிவுகளை அகற்றுவதைப் பொறுப்புடன் நிர்வகிப்பதற்காக 'குறைத்தல், மீள்பயன்பாடு மற்றும் மீள்சுழற்சி ஆகிய (Reduce, Reuse and Recycle) 3R செயற்றிட்டத்தை பின்பற்றுகிறது. சரியான உத்திகள் செயல்படுத்தப்பட்டால், மீள்சுழற்சி, குறிப்பாக, இந்த சிக்கலைத் தணிப்பதில் மிகவும் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்க முடியும். பிளாஸ்ரிக்கின் மீள்சுழற்சி மற்றும் சுற்றளவு தொடர்பான முயற்சிகளை நாம் வலுப்படுத்த வேண்டும். Polyethene Terephthalate (PET) பிளாஸ்ரிக்குகள் போன்ற சுலபமான வளங்களை குறிவைத்து செயற்படுதல் சிறந்தது.

இத்தகைய முயற்சிகள் பொருளாதார ரீதியாக சாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தும். எதிர்காலத்தில் தேவையற்ற இறக்குமதிகளைக் குறைப்பது இலங்கையின் மிக முக்கியமான பொருளாதார முன்னுரிமைகளில் ஒன்றாக இருக்கும். மீள்சுழற்சியை வலுப்படுத்துவதன் மூலம் நாடு இந்த இறக்குமதியை வெகுவாகக் குறைத்து மதிப்புமிக்க அந்நியச் செலாவணியைச் சேமிக்க முடியும் என்பதைக் கருத்திற்கொண்டு பிளாஸ்ரிக் இறக்குமதிகள் இந்த விடயத்தில் தனித்து நிற்கின்றன.

### PET பிளாஸ்ரிக்குகள் மதிப்புமிக்கவை

பிளாஸ்ரிக்கை நாம் பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும். அது முடிந்தவரை மீள்சுழற்சி செய்யப்பட வேண்டும். PET பிளாஸ்ரிக்குகள் இந்த விடயத்தில் தனித்து நிற்கின்றன. ஏனெனில், அவை 100% மீள்சுழற்சி செய்யக்கூடியவை. கூடுதலாக, PET இன் சாத்தியமான மதிப்பு கூட்டல் விதிவிலக்காக அதிகமாக உள்ளது, ஏனெனில், நமது நாட்டில் மீள்சுழற்சி செய்வதற்கும் அதை பெறுமதியான பொருட்களாக மாற்றுவதற்கும் தேவையான உட்கட்டமைப்பாக உள்ளது. PET பிளாஸ்ரிக்குகள், பானம் /தண்ணீர்ப்போத்தல்கள், உணவுப் பெட்டிகள் மற்றும் கை சுத்திகரிப்பு மற்றும் தலைமுடி எண்ணெய்கள் போன்ற தனிப்பட்ட பராமரிப்புப் பொருட்கள் உட்பட பல பொருட்களைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் மிகவும் பொதுவான பிளாஸ்ரிக் வகைகளில் ஒன்றாகும்.

இலங்கையில், Eco Spindles (Private) Ltd போன்ற நிறுவனங்களால் தூரிகைகள் (Brush) மற்றும் துடைப்பங்களில் பயன்படுத்தப்படுவதுடன் ஆடைகளுக்கான நூலை உற்பத்திசெய்வதற்காக PET போத்தல்கள் மீள்சுழற்சி செய்யப்படுகின்றன. எனவே, PET பிளாஸ்ரிக் கழிவுகள் ஏற்கனவே நாட்டிற்கு அந்நிய செலாவணி வருவாயை உருவாக்க பயன்படுத்தப்படுகின்றன.

தற்போது, புள்ளிவிபரங்களின்படி, இலங்கையின் மாதாந்த PET போத்தல்களின் பயன்பாடு 12,50,000 கிலோவாக மதிப்பிடப்பட்டுள்ள நிலையில், 2,50,000 கிலோகிராம் அல்லது இதில் 20% மட்டுமே மீள்சுழற்சி செய்யப்படுகிறது. PET போத்தல்களை மீள்சுழற்சி செய்வதில் - நாம் ஆற்றலுக்குக் கீழே செயல்படுகிறோம் என்பதை இது குறிக்கிறது.

### தொடர்ச்சியான மேம்பாடுகள்

ஒருசில பிளாஸ்ரிக் பொருட்களை தடைசெய்ய இலங்கை நடவடிக்கை எடுத்துள்ளது. இவை மிகவும் தீங்கு விளைவிக்கும். ஏனெனில், அவை சேகரிக்கக்கூடியவை மற்றும் மீள்சுழற்சி செய்ய முடியாதவை மற்றும் PET போன்ற பிளாஸ்ரிக் வகைகளிலிருந்து கணிசமாக வேறுபடுகின்றன, அவை 100% மீள்சுழற்சி செய்யப்படுகின்றன. எனவே, தொடர்புடைய சட்ட கட்டமைப்பை மேலும் வலுப்படுத்த வேண்டும். தற்போது, நுகர்வுக்குப் பிந்தைய தயாரிப்புகளின் செயற்பாட்டு நடவடிக்கையை அல்லது அப்புறப்படுத்தலுக்கு தயாரிப்பாளர்களை பொறுப்பாக வைத்திருக்கும் விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு PET போன்ற கருத்துகளை அறிமுகப்படுத்துவதில் நாங்கள் பணியாற்றி வருகிறோம்.

தற்போது, உலகளாவிய ரீதியில் குளிர்பான நிறுவனங்களை மீள்சுழற்சி செய்வதிலும், நுகர்வோர் முறையான மீள்சுழற்சி நடை முறைகள் குறித்து அறிந்திருப்பதை உறுதி செய்வதிலும் தங்கள் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்றனர். இலங்கையிலுள்ள Coca-Cola போன்ற நிறுவனங்கள் தங்கள் PET பிளாஸ்ரிக் பேக்கேஜிங்கை மீள்சுழற்சி செய்வதற்கான திட்டங்களையும் தாக்கமிக்க கூட்டாண்மைகளையும் தானாக முன்வந்து செயல்படுத்தியுள்ளன. இத்தகைய முயற்சிகள் வலுப்படுத்தப்பட வேண்டும், மேலும் EPR ஒரு முக்கியமான தீர்வாகக் கருதப்பட வேண்டும்.

இந்தத் துறையில் உலகளாவிய சிறந்த நடைமுறைகளுக்கேற்ப நமது செயற்பாடுகளையும் மாற்ற வேண்டும். உதாரணமாக, உணவு தர பேக்கேஜிங்கில் 'Bottle-to-Bottle' மீள்சுழற்சி செய்வதை இலங்கை அனுமதிக்காது, அதாவது முழு PET போத்தலையும் மீள்சுழற்சி செய்து புதிய PETபோத்தலை தயாரிக்கிறது. இருப்பினும், பல வளர்ந்த நாடுகளில் இது ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையாகும், இது அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தால் (FDA) கூட அனுமதிக்கப்படுகிறது.

### பொது ஒத்துழைப்பு மற்றும் தயாரிப்பு வடிவமைப்பு

பொது விழிப்புணர்வு, அர்ப்பணிப்பு மற்றும் செயலுக்குமான ஒத்துழைப்பு ஆகியன முக்கியமானவை. உதாரணமாக, PET போத்தல்கள் மண்ணெண்ணெய் போன்ற பொருட்களை சேமித்து வைக்கப் பயன்படுத்தப்படுகின்றன, அதன் பிறகு மீள்சுழற்சிக்கு கொடுக்கப்படுகின்றன. இந்த நேரத்தில் அவை மாசுபட்டுள்ளன மற்றும் மீண்டும் பயன்படுத்த முடியாது. எனவே, PET போத்தல்களை நல்ல நிலையில் திருப்பித் தருவதற்கு நாம் நுகர்வோரை ஊக்குவிக்க வேண்டும்.

மேலும், தயாரிப்பு வடிவமைப்பும் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. உதாரணமாக, யோகட் கோப்பையை மூடியுள்ள அலுமினியத் தகடு/மூடி முழுவதுமாக வெளியேற்றப்படவில்லை என்றால், கோப்பையை மீள்சுழற்சி செய்ய முடியாது. இது ஒரு நீண்டகால முயற்சியாக இருக்கக்கூடும் என்றாலும், பேக்கேஜிங்கிற்கு சிதைக்கக்கூடிய இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்தி அல்லது பேக்கேஜிங்கின் உயர் மீள்சுழற்சியை உறுதிசெய்யும் வகையில், சுற்றுச் சூழல் நட்பு வடிவமைப்புகளின் சாத்தியக் கூறுகளை நிறுவனங்கள் ஆராய வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம்.

**(திருமதி சரோஜினி ஜயசேகர – முகாமையாளர் மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபை, திடக்கழிவு நிர்வகிப்பு)**

# Expolanka Holdings PLC, சர்வோதயாவின் பங்காளிகளுடன் இணைந்து 'Sabrina Yusoof Women's வலுவூட்டல் முயற்சியை ஆரம்பித்துள்ளது





இலங்கைப் பெண்கள் தலைமையிலான தொழில்முனைவோருக்கான வாய்ப்புகளை எளிதாக்கும் முயற்சியில், உலகளாவிய ரீதியில் பன்முகப்படுத்தப்பட்ட கூட்டு நிறுவனமான Expolanka, சர்வோதயாவுடன் இணைந்து 'Sabrina Yusoof Women's வலுவூட்டல் முன்முயற்சியை அறிமுகப்படுத்தியது.

குறைந்தவருமானம் பெறும் பெண் தொழில் முயற்சியாளர்கள் தங்களுடைய சொந்த வியாபார முயற்சிகளை நிறுவுவதற்கும் மேம்படுத்துவதற்கும் நிதியளிப்பதை முதன்மையான நோக்கமாகக் கொண்டது. மேலும் இலங்கைப் பெண்கள் தனக்கென்று நிலையான வருமானத்தை உருவாக்குவதன் மூலம் நிதி சுதந்திரத்தைப் பெற முடியும்.

கொழும்பு மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட MSMEகளுக்கு அவர்களின் வணிகங்களை வலுவூட்டும் வகையில் மானியம் வழங்குவதையும், வளர்ந்துவரும் 'புதிய இயல்புக்கு' (New Normal) ஏற்ப அவர்களுக்கு உதவுவதையும் நோக்கமாகக்கொண்டது. இத்திட்டத்திற்காக மொத்தம் 24 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

எக்ஸ்போலங்கா குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஹனிப் யூசுப் உட்பட இரு நிறுவனங்களின் சிரேஷ்ட பிரதிநிதிகளும் Sarvodaya Shramadana Movement இன் தலைவர் கலாநிதி வின்யா ஆரியரத்ன அவர்களுடன் பல நிர்வாக சபை உறுப்பினர்களும் கலந்துகொண்ட விசேட நிகழ்வின்போது இந்தத் திட்டத்தின் உத்தியோகபூர்வ அறிமுகம் இடம்பெற்றது.

"நமது தேசத்தின் பெண்கள் முழு அதிகாரம் பெற்றால்தான் நமது தேசத்தின் வளர்ச்சி உண்மையிலேயே ஆரம்பிக்கும். Sabrina Yusoof Women's வலுவூட்டல் முன்முயற்சியின் மூலம், வளர்ச்சியடையும் திறன்கொண்ட பெண்கள் தலைமையிலான MSMEகளுக்கு நிதி உதவி, ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப ஆதரவை வழங்குவதை இலக்காகக்கொண்டுள்ளோம், மேலும், சமூகம் முழுவதும் நேர்மறையான விளைவை உருவாக்குகிறோம். இதையொட்டி, இலங்கைப் பெண்கள் வளர்ச்சியடைவதற்கும், அவர்களின் சொந்த நிதிச் சுதந்திரத்தை அடைவதற்கும் இந்த வணிகங்கள் அதிக வாய்ப்புகளை உருவாக்கும். இதுவே எமது தேசத்தை வளப்படுத்துவதற்கான பாதை என நாங்கள் நம்புகிறோம். மேலும் சர்வோதயா போன்ற உறுதியான ஒரு பங்குதாரருடன் இணைந்து செயற்படுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இதன்மூலம் வலுவூட்டல் செயற்றிட்டங்கள் அதன் முழுத் திறனை அடைய உதவுகிறது" என Expolanka குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஹனிப் யூசுப் தெரிவித்தார்.

இந்த ஒன்றுகூடலானது, இந்த வணிகங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கும், அவை முன்னேறும்போது கூடுதல் நிதி ஒதுக்குவதற்கும் Expolanka மற்றும் சர்வோதயா உறுப்பினர்களைக்கொண்ட ஒரு கூட்டுக் குழுவை நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

வணிக பங்குதாரர்களின் முதல் தொகுதி அவர்களின் வணிக நிறுவனம்/யோசனை, அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அதற்கான நிதித் தேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பங்குதாரர்கள் உணவு, கைவினைப்பொருட்கள், ஆடைகள், தையல், பாதணிகள், நிலையான அழகு பராமரிப்பு மற்றும் அலங்கார வளர்ப்பு மீன்கள் வரை பல்வேறு தொழில்களில் செயல்பட்டு வந்துள்ளனர்.

இந்நிகழ்வில் சர்வோதய தலைவர் கலாநிதி வின்யா ஆரியரத்ன கருத்து தெரிவிக்கையில், "எங்களது Expolanka உடனான ஈடுபாடு, பெண்கள் தலைமையிலான நிறுவனங்களுக்கு புத்துயிர் பெறுவதற்கும் செழித்தோங்குவதற்கும் உதவும் சூழலை உருவாக்கும் முழுமையான ஆதரவை வழங்குவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. நிதி ஆதாரங்களை வழங்குவதன் மூலமும், கொவிட்டுக்குப் பிந்தைய சூழலில் இந்த முயற்சிகளை மாற்றியமைக்கவும், மீள்தன்மையை உருவாக்கவும் உதவும் தொழில்நுட்ப ஆதரவின் மூலமாகவும் இது மேற்கொள்ளப்படும். எங்களின் பரந்த உட்கட்டமைப்பு மற்றும் திறன்கள் Expolanka வின் ஆதரவு மற்றும் இந்தத் திட்டத்தில் வெற்றியை அளிப்பதிலுள்ள ஆர்வத்தால் நன்கு மேம்படுத்தப்படும்."

பெண் தொழில்முனைவோருக்கான வாய்ப்புகளை ஊக்குவிப்பதற்காக 'Sabrina Yusoof Women's வலுவூட்டல் முன்முயற்சி மூலம் செயல்படுத்தப்படும் தொடர்ச்சியான ஈடுபாடுகளில் இந்தத் திட்டத்தின் துவக்கம் முதலாவதாக இருக்கும்.

செயற்திட்ட வலுவூட்டல் முதன்முதலில் Expolankaவின் பேண்தகைமையின் தலைவரான மறைந்த சப்ரினா யூசுப் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது, அவர் மிகவும் வளமான மற்றும் சிறந்த இலங்கையை உருவாக்குவதில் அயராத அர்ப்பணிப்பு, அன்பு மற்றும் ஆர்வத்துடன் பணியாற்றினார். இந்த முன்முயற்சிகள் அவரது நினைவாகவும், அவருடைய வாழ்க்கைக்கு மரியாதை மற்றும் அவரது சிந்தனை உட்பார்வைக்கு ஏற்பவும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளன.

ஓர் அமைப்பாக Expolanka அதன் சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை முயற்சிகளின் மையத்திலுள்ள முக்கியமான சமூக உந்துதல், நிலையான, தொழில்முனைவுத் திட்டங்களுக்கு ஆதரவளிப்பதில் எப்போதும் முன்னணியில் உள்ளதென்பதும் குறிப்பிடத்தக்கது.


திகதி 13.01.2022 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4646
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 11,154,090.00
ஆங்கில எழுத்து S வெற்றி இலக்கங்கள் 4 2 8 5 0 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 25,489,784.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2941
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,316,740.00
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 05 10 63 64
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,263,738.40

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 994
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,209,800.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 167,002,597.20
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
Y 03 01 21 31 52

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 676
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,813,400.00
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 29 30 42 81
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 92,563,036.80

செவண உங்களுக்கு வீடு - கைகளில் காசு
சீட்டிழுப்பு இலக்கம் : 343
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,103,860.00
ஆங்கில எழுத்து L வெற்றி இலக்கங்கள் 13 44 68 86
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,166,342.40

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு இலக்கம் :1666
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,160,220.00
சுப்பர் இலக்கம் 15 வெற்றி இலக்கங்கள் 19 47 48 51
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,554,707.20

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.U.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416





# ‘தமிழன்’ அலுவலகத்தில் தைத்திருநாள் கொண்டாட்டம்...

‘தமிழன்’ பத்திரிகையின் தைத்திருநாள் நிகழ்வு லிபர்ட்டி பப்ளிசர்ஸ் தலைமை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்... (படப்பிடிப்பு:- சமன் அபேசிறிவர்தன)































லிபர்ட்டி பப்ளிஷர்ஸின் மற்றுமொரு வெளியீடான மாணவர் சஞ்சிகை ஜூனியர் தமிழனின் முதலாமாண்டு பூர்த்தி, நேற்று (14.01.2022) லிபர்ட்டி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் கலந்துகொண்டு தமது திறமைகளை வெளிக்காட்டிய மாணவர் சிலரையும், விருந்தினர்கள் மற்றும் விழாவின் சில தருணங்களையுமே படங்களில் காண்கின்றீர்கள். (படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)

# நெருங்கும் சிறிய கோள் பூமி மீது மோதுமா?



சூரிய மண்டலத்தில் சுற்றிவரும் பாறைத் துகள்கள் ஒன்றிணைந்த எஸ்டரொய்ட் எனப்படும் சிறிய கோள் பூமிக்கு அருகில் வரவுள்ளது. இது பூமி மீது மோதும் அபூர்வ நிகழ்வு நடக்கலாம் என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

சூரிய மண்டலம் 460 கோடி ஆண்டுகளுக்கு முன் உருவானபோது அதிலிருந்து வெளிப்பட்ட பாறைத் துகள்கள் ஒன்றாக இணைந்து ஆயிரக்கணக்கான சிறிய கோள்கள் உருவாகின. இவை சூரிய மண்டலத்தை சுற்றி வருகின்றன.

கடந்த 1974இல் அவுஸ்திரேலிய விஞ்ஞானியால் கண்டுபிடிக்கப்பட்ட 7482 என்றழைக்கப்படும் சிறிய கோள் எதிர்வரும் 18ஆம் திகதி பூமிக்கு மிக அருகில் வரும் என அமெரிக்க விண்வெளி ஆய்வு அமைப்பான நாசாவின் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த சிறிய கோள் 19.3 இலட்சம் கிலோமீற்றர் தொலைவில் பூமியை ஒட்டிச் செல்லும். இது பூமிக்கும் நிலவுக்கும் உள்ள தொலைவைவிட 5.15 மடங்கு அதிகம். இந்த சிறிய கோள் மணிக்கு 70,416 கிலோமீற்றர் வேகத்தில் வந்து கொண்டிருக்கிறது.

ஒரு கிலோமீற்றர் விட்டமும், 3,300 அடி உயரமும் உள்ள இந்த சிறிய கோள் பிரம்மாண்டமாக உள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இது பூமியின் மீது மோதுவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளதாகவும் கூறப்படுகிறது. இவ்வாறு மிகப் பெரிய சிறிய கோள்கள் பூமியை தாக்குவது ஆறு இலட்சம் ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும் அபூர்வ சம்பவமாகவும் கூறப்படுகிறது.

சூரிய மண்டலத்தில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறிய கோள்கள் பூமிக்கு அருகில் உள்ளன. இவற்றில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவை பூமியை தாக்கக்கூடியவையாக இருக்கலாம் என்றும் நாசா விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இந்த ஆண்டில் கடந்த 13 நாட்களில் மட்டும் மூன்று சிறிய கோள்கள் பூமிக்கு அருகில் வந்துள்ளன. அதில் மிகப்பெரிய சிறிய கோள், 49 ஆயிரம் மீற்றர் விட்டம் உடையதாக இருந்தது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7